விலை : 20.00
பக்கங்கள் : இருபது


# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லாண்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 08 புதன்கிழமை (20.02.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 063

# படையினரின் தடுப்பிலிருந்தே பாலச்சந்திரன் படுகொலை!








(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன், வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கைப் படையினரால் பிடித்து வைக்கப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதற்கு தமக்கு ஆதாரம் கிடைத்திருப்பதாக சனல் 4 தொலைக் காட்சியின் நிகழ்ச்சி இயக்குநர்களில் ஒருவரான கலும் மக்ரே தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)



## பாலகன் படுகொலை கொடூரமான காட்சி

### விபரிக்கிறது இன்டிபெண்டன்ட்

(லண்டன்)

முள்ளிவாய்க்காலின் இறுதிநேரக் கொடூரக் காட்சிகளால் உலகமே அதிர்ச்சியுற்றிருக்கையில், இப்போது கிடைத்திருப்பவை இதயத்தை ஒருகணம் நிறுத்தி வைக்கக்கூடிய அதி கொடூரங்கள் நிறைந்த காட்சிகள் என த இன்டிபெண்டன்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஒரு சந்தைப் பகுதியில் வைத்து தொலைந்துபோன சிறு குழந்தை போல் ஒரு மூலையில் அந்தச் சிறுவன் இருத்தி வைக்கப்பட்டுள்ளான். அவனுக்கு ஏதோ சிற்றுண்டி கொறிக்க வழங்கப்பட்டிருக்கின்றது. அவன் நிமிர்ந்து பார்க்கிறான். யாராவது தெரிந்த முகங்கள் தென்படாதா என்ற ஓர் ஏக்கம் அவன் விழிகளில்.

அந்தச் சிறுவன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் புதல்வன் பாலச்சந்திரன். 12 வயதுடைய சிறுவன். புதிய ஆதாரப் புகைப்படங்கள் ஒரு நெஞ்சை உருக்கும் கதையைச் சொல்கின்றது.

இந்தச் சிறுவன் போரிலோ அல்லது குறுக்குச் சூடுகளிலோ கொல்லப்படவில்லை. இலங்கை இராணுவத்தால் பிடிக்கப்பட்டுப் பதுங்குகுழியினுள் சிலமணி நேரங்கள் இராணுவக் காவலுடன் வைத்திருக்கப்பட்டு அதன் பின்னர் கொடூரமாகச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அதன்பின்னர் மீண்டும் இவரது உடலம் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் கிடைக்கப்பெற்ற போரின் பின்னரான கொடூரப் படுகொலைகள் பற்றிய காணொளியில் உடலம் காட்டப்பட்டது.

இப்பொழுது கிடைத்திருக்கும் ஆதாரங்கள் பாலச்சந்திரன் உயிருடன் பிடிக்கப்பட்டுப் பின்னர் படுகொலை செய்யப்பட்டிருப்பது சந்தேகங்கள் எதுவுமின்றி நிரூபிக்கின்றது.

இது மிகவும் இராணுவத்தினரின் விருப்பத்தின் பேரில் இராணுவத்தாலோ அல்லது அவர்களுடன் இணைந்து படுகொலைகள் புரியும் துணைக் (20ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைகளில் இருந்து இலங்கை தப்ப முடியாது!

### – சனல் 4

இலங்கை அரசாங்கம் போர்க் குற்ற விசாரணைகளிலிருந்து தப்பிக்க முடியாது என சனல் 4 தொலைக்காட்சியின் இயக்குநர் கலும் மக்ரே தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன், இலங்கை இராணுவத்தால் கொடூரமாகக் கொல்லப்பட்டது தொடர்பான புகைப்படங்களை சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இடத்தில் மணல் மூடைகளுக்கு நடுவே பரிதாபகரமாக, 12 வயதான பாலச்சந்திரன் அமர்ந்திருக்கும் படம் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன், பாலச்சந்திரன் பிஸ்கட் போன்ற எதையோ சாப்பிடு (20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் பேச்சாளர் மறுப்பு

(கொழும்பு)

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன், பாலச்சந்திரன் இராணுவத்தினரின் காவலில் இருந்தபோது படுகொலை செய்யப்பட்டுள்ளதாக சனல் 4 ஊடகம் வெளியிட்டுள்ள புகைப்படங்கள் எதுவும் உண்மையில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரானவர்களின் திட்டமிட்ட செயற்பாடுகளே இவை. நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கில் பொய்யான தகவல்களையும், வதந்திகளையும் திட்டமிட்ட வகையில் பரப்பி வருகிறார்கள்.

நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையிலே இராணுவத்துக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இக்குற்றச்சாட்டுக்கள் இலங்கைக்கு புதியதல்ல.

இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு எவ்வித உண்மையான ஆதாரங்களும் இல்லை. அவ்வாறான சில குற்றச்செயல்களை குற்றவியல் விசாரணைத் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி தேவை

சேவை நிலையம் ஒன்று அமைப்பதற்கு (Service Station) யாழ்.நகரிலிருந்து 3 Km ற்கு உட்பட்ட 2 பரப்பு வெற்று நிலம் வாடகைக்குத் தேவை. (பருத்தித்துறை வீதி, பிரதான வீதி, மானிப்பாய் வீதி, பலாலி வீதி) கிணற்றுடன் கூடிய காணி விரும்பத்தக்கது. கைவிடப்பட்ட அல்லது கைமாற்றி தரத்தக்க சேவை நிலையங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

**தொடர்புகளுக்கு-**

**0777 111 555**

(சி-2480)






## தேவை

*யாழ்.நகரில் ஸ்ரூடியோ ஒன்றுக்கு*

1) *Video Editing*
2) *Photoshop* (*Album Designer*)
3) சிற்றூழியர்கள்



அனுபவமுள்ளவர்கள் ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும். தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

**309, நாவலர் வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**
**0777162339**

(1776)






**01-03-2013 இல் மாணிக்க விழாவினைக் கொண்டாடும்**

கலையுலகக் கல்விக் கலங்கரை விளக்கமான

***The Express Institute*** இனை

**வாழ்த்துவதில் உலக மக்கள் உவப்படைகின்றனர்.**

சங்கத்தில் உதித்து, தமிழ் இனத்தை வளர்த்தெடுக்கும் எமது நிறுவனம் 'எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்' என்றென்றும் வாழ வாழ்த்துகின்றோம்.
வாழிய பல்லாண்டுகள்...

வாழ்த்துவோர்,
நோர்வே வாழ் பழைய மாணவர்கள்.


# இலங்கைக்கு எதிரான விசாரணையை வலியுறுத்தி 132 கிறிஸ்தவ குருமார்கள் ஐ.நாவிற்கு கடிதம்

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டும் என வலியுறுத்தி மன்னார் ஆயர் உட்பட வடக்கு, கிழக்கை சேர்ந்த 132 கிறிஸ்தவ குருமார் கையெழுத்திட்ட கடிதம் ஒன்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அரசியல் தீர்வு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் போனவர்கள் குறித்த விவகாரங்களைக் கையாளும் ஆணையாளரை நியமித்தல், இலங்கை இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவித்தல், ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள், இறந்தவர்கள், காணாமல்போனவர்களை நினைவு கூருதல் என்பன உள்ளிட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கியமான பரிந்துரைகள் தொடர்ந்துபுறக்கணிக்கப்படுவதுடன், மீறப்படுகின்றன என்பதற்கு நாமும் சாட்சிகளாக இருக்கின்றோம்.

கடந்த ஆண்டில், அமைதியான வழியில் இலங்கை அரசை விமர்சித்தவர்கள் அல்லது சவால் விடுத்தவர்கள், ஐ.நாவுடன் தொடர்புகளை வைத்திருந்தவர்கள் கூட, அமைச்சர்கள், அதிகாரிகள், இராணுவத்தினர், காவல் துறையினரால் அவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். விசாரிக்கப்பட்டுள்ளனர், கைது செய்யப்பட்டுள்ளனர். அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

பத்தாயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டும், காணாமற்போயும் உள்ள நிலையில், தமிழ் மக்களின் சமூக, கலாசார, மத, மொழி, நில உரிமைகள் - ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் போருக்கு முன்னரும், போரின் போதும், போருக்குப் பின்னரும், அடக்கப்படுவதை நாம் உணர்கின்றோம்.

போருக்கு பின்னர், வேகப்படுத்தப்பட்டுள்ள இந்த அடக்குமுறைகள் எங்கள் மக்களின் அடையாளத்தை எதிர்காலத்தில் அழித்து விடும் என்று நாம் அஞ்சுகின்றோம்.

எனவே தமிழ் மக்களுக்கு உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான ஒரு அரசியல் தீர்வு அளிக்கப்பட வேண்டியஒரு அவசர தேவை உள்ளது.

எனவே, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19 வது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கமைய நிலைமைகளில் முன்னேற்றம் ஏதும் ஏற்படாததைச் சுட்டிக்காட்டும் வகையிலும்,

போரின் போது எல்லாத் தரப்பினராலும் இழைக்கப்பட்ட அனைத்துலக சட்டமீறல்கள் குறித்து விசாரிக்க சுதந்திரமான அனைத்துலக விசாரணைக் குழுவை உருவாக்கும் வகையிலும், கடந்தகால, தற்போதைய மனித உரிமை மீறல்களுக்கு பரந்தளவிலான பதிலளிக்கும் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கும், நல்லிணக்க முயற்சிகளுக்கு இலங்கை அரசுக்கு உதவவும், ஆலோசனை வழங்கவும் சிறப்பு பிரதிநிதி ஒருவரை நியமியுங்கள்.

போரின் இறுதிக் கட்டத்தில் ஐ.நாவின் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்தத் தவறிய அதிகாரிகள் குறித்து பொறுப்புக்கூறும் பொறிமுறையை உருவாக்கி கடுமையாக நடவடிக்கை எடுக்கும் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர கோருகின்றோம் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.(செ-1)

# முஸ்லிம்களுக்கு மாத்திரம் ஹலால்!

முஸ்லிம்களுக்கு மாத்திரம் ஹலால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பொருட்களை எதிர் காலத்தில் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஹலால் விவகாரம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மற்றும் முஸ்லிம் கவுன்சில் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போதே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

எதிர்காலத்தில் முஸ்லிம்களுக்கு மாத்திரம் ஹலால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பொருட்களை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய மதத்தினருக்கும் ஹலால் அத்தாட்சிப்படுத்தபட்ட பொருட்களை வழங்குவதற்கும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இனவாத பிரசாரங்கள் தொடர்பிலும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளன.(செ-11)


## இலங்கை நூலகச் சங்கம்

**நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 -2013/2014**

**நேர்முகத் தேர்வு**

நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1ற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் அமைந்துள்ள பௌதிகவியல் துறை விரிவுரைமண்டபத்தில் 24.02.2013 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணி–மாலை 3.30 மணிவரை நடை பெறவுள்ளது.

**தகைமைகள்:**

* ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற பட்டம்

அல்லது

* க.பொ.த(உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி அத்துடன்
* க.பொ.த(சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத தடைவைகளில் ஆறுபாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன், அவற்றுள் 2 திறமைச் சித்திகளை மொழி மற்றும் கணிதம் தூயகணிதத்தில் பெற்றிருப்பதுடன் ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

மொழி மூலம்: தமிழ் (யாழ்ப்பாண நிலையத்தில்)
கற்கைநெறிக்கட்டணம்: ரூபா 12,500.00
விரிவுரைகளுடன் கூடிய வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் நடைபெறும்.

குறிப்பு :
இக் கற்கைநெறிக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் மேற்படி நேர்முகத் தேர்வுக்கு பின்வரும் ஆவணங்களுடன் தோற்றமுடியும்.

* தேசிய அடையாளஅட்டை
* பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
* விவாகப்பதிவு அத்தாட்சிப் பத்திரம் (திருமணமான பெண்களுக்கு)
* கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
* சேவைக்காலச் சான்றிதழ் (பணிபுரிவோருக்கானது)

திருமதி கல்பனா சந்திரசேகர்
ஒருங்கிணைப்பாளர்/ யாழ் நிலையம்
இலங்கை நூலகச் சங்கம்.

(சி-2477)



## அறிவித்தல்

### மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)

*வட்டாரம் 04, சாவற்காட்டு லேன்*
*ஆதன இலக்கம் 63*

வட்டாரம் -04 சாவற்காடு லேன் ஆனைக்கோட்டை ஆதன இலக்கம் 63 இல் அமைந்துள்ள (உறுதிப்படி: வடமாகாண யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை 'கவடுகோலி' எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்று குளி ஐந்து நிலப்பரப்பு 01 குளி 5.15 கொண்ட ஆதனம்) இவ் ஆதனமானது யாழ்ப்பாணம் சுதுமலை தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சுப்பிரமணியம் என்பவரால் நன்கொடையாக சுப்பிரமணியம் மணிவண்ணன் ஆகிய இவரால் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் செ.ந.விஸ்வலிங்கம் முகதாலில் நிறைவேறிய 4515 ஆம் இலக்க 2012.07.03 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இவ் 'கவடுகோலி' நிலப்பரப்பு 1 குளி 5.15 இல் சோரியலாய் 17/36 பங்கும் கவடுகோலி குளி 2.6 சொரியலாய் 53/144 பங்கம் சொரியலாய உள்ளது. எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாது விடத்து இவ்வாதனம் சுப்பிரமணியம் மணிவண்ணன் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

*தவிசாளர், வலி.தென்மேற்கு பிரதேசசபை,*
*மானிப்பாய்.*

(1771)



## மரண அறிவித்தல்

### தம்பு கனகரத்தினம்
**(பன்மொழிப் புலவர்)**



மயிலங்கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வாழ்விடமாகவும் கொண்ட பன்மொழிப் புலவர் தம்பு கனகரத்தினம் அவர்கள் 18.02.2013 திங்கள் இரவு இறையடி சேர்ந்துவிட்டார்.

இவர் மயிலங்கூடல், இளவாலையைச் சேர்ந்த அமரர் தம்பு தம்பதிகளின் மகனும், திருமதி திலகவதி (ஓய்வு நிலை ஆசிரியை சைவமங்கையர் கழகம்) அவர்களின் அன்புக் கணவரும், தொட்டிலடி, சண்டிலிப்பாய் அமரர் பொன்னம்பலம் தம்பதிகளின் மருமகனும், அமரர் திருமதி இராணி பொன்னையா அவர்களின் சகோதரனும், சி. பாஸ்கரா (கொழும்பு மாநகர சபை உறுப்பினர்), திருமதி கனகரூபினி உமாகாந்தன் (கனடா) சஞ்சிதா, சஞ்சீவன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சிறியதந்தையும், பொ.செங்கதிர்ச்செல்வன் (விரிவுரையாளர், யாழ் பல் கலைக்கழகம்) அவர்களின் மாமனாரும், கேதாரணி, அஸ்வின், ஆர்த்திக், பாலகுகன், ரஸ்மி, இசான், சேயோன், சேந்தன், வானதி ஆகியோரின் பேரனுமாவார்.

இவரது பூதவுடல் 20.02.2013 புதன்கிழமை காலை 8.00 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 11.00 மணிக்கு இறுதிக் கிரியைகள் ஆரம்பமாகி பி.ப 1.00 மணிக்கு கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி அறியத்தருகின்றோம்.

**தகவல்: சி. பாஸ்கரா**
(கொழும்பு மாநகர சபை உறுப்பினர்)

தொலை : 0772378718


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## விண்வெளியும் மனநிலையும்

"ஒரு 20 அடி நீளம், 18 அடி அகலமும் உள்ள அறையொன்றினுள்ளே இரு நபர்களை வைத்து பூட்டுங்கள்; அவர்களுக்கும் வெளியுலகத்திற்கும் எதுவிதமான தொடர்புகளும் இருக்கக் கூடாது. அனைத்தையும் துண்டிக்க வேண்டும். ஓரிரு மாதங்கள் வரை அவர்களை வெளியிலேயே விடக்கூடாது. இப்படியாகச் செய்தால், ஒரு கொலை நடைபெறுவதற்கான சூழ்நிலையை உருவாக்கி விட்டது என்று அர்த்தம்.

ரஷ்ய விண்வெளி வீரர் ஒருவர் எழுதி வைத்திருந்த தினசரி குறிப்பேட்டில் இவ்வாறு இருந்தது. அவர் பெயர் வாலரி நியுமின். இவர் 1980 ஆம் ஆண்டு இன்னொருவருடன் கூடி விண்வெளிக்குப் போய் திரும்பி வந்தவர்.

ரொக்கெட்டிலே விண்வெளிக்குச் சென்று சிறிது நாட்கள் அங்கே தங்கி விட்டு திரும்பி வரும்போது அவர்களது மன நிலை மிகவும் பாதிப்படைந்து காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ரொக்கெட்டிலே மிகவும் துணிச்சலாகத்தான் புறப்பட்டார்கள். இருந்தாலும் ரொக்கெட் பயணிக்கும் பாதையோ எல்லையில்லாமல் பரந்து கிடக்கும் வானமாகும்.

அங்கே என்ன நடக்கும் என்று யாருக்குமே தெரியாது. எந்தக் கணனியென்றாலும் அதைத் துல்லியமாகக் கணக்கு சொல்லாது. பயணிக்கு ரொக்கெட்டில் ஏதாவது கோளாறு நேர்ந்தால் வீதியில் ஓரமாக நிறுத்தி பழுது பார்க்க முடியுமா? போனால் போனதுதான்.

சுவாசிப்பதற்கு போதியளவு வளி கிடைக்காது. பகல் என்றால் வெப்பமாகவும்; இரவென்றால் நினைத்துப் பார்க்க முடியாதளவு இருள் சூழ்ந்தும் காணப்படும்.

இது மாதிரியான அபாயத்தை மனதிலே சுமந்து கொண்டுதான் விண்வெளி வீரர்கள் ரொக்கெட்டிலே பயணிக்கிறார்கள். ரொக்கெட் எவ்வளவு பெரியது? ஒரு சிறிய கூடுதான் விண்வெளி வீரன் அமரும் இடமாக அமைந்திருக்கும். உள்ளே இருந்து அழுதாலும் சிரித்தாலும் தரையில் இருந்துதான் பதில் வர வேண்டும்.

1982 இலே இரண்டு விண்வெளி வீரர்கள் ஒரே விண்கலத்திலே புறப்பட்டார்கள்.

இவர்கள் இருவரும் விண்கலத்தினுள் அடி வைத்ததிலிருந்து பேசுவது கிடையாது. மிகவும் அவசியம் என்றால், ஓரிரு வார்த்தைகள் பேசிக் கொள்வார்கள். இப்படியாக புழுக்கமான, இறுக்கமான, மௌனமான சூழ்நிலையிலேயே விண்வெளி வீரர்கள் 211 நாட்களைக் கடத்தி இருக்கிறார்கள்.

இவர்கள் இருவரும் இப்படியாக பல்லைக் கடித்துக் கொண்டு, 211 நாட்களையும் விண்ணிலே செலவு செய்து விட்டு, தப்பினோம்; பிழைத்தோம் என்று மீண்டும் பூமிக்கு வந்து சேர்ந்தார்கள்.

அந்த இருவரில் ஒருவர்தான் இதையெல்லாம் தனது தினக் குறிப்பில் எழுதி வைத்துள்ளார். இக் குறிப்பேடு 1983 ஆம் ஆண்டிலே சோவியத் யூனியனிலே புத்தகமாக வெளி வந்துள்ளது.

விண்வெளி வீரர்கள் மீண்டும் பூமியில் தரை இறங்கியதும் அவர்கள் இரத்தப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். அப்போது ஹைட்ரோ கார்ட்டிடுசோன், காட்டி கோலமன் ஆகிய வேதியியல் பொருட்கள் இவர்களது உடம்பில் சுரந்திருப்பது கண்டறியப்படும். இந்த வேதியியல் பொருளானது ஒரு சாதாரண மனிதன் பதற்றமடையும் போது ஏற்படுகிறது. பின்னர் அவர் ஓய்வெடுக்கும் போது... இப்பொருள் இயல்பாகவே மறைந்து விடும். ஆனால், விண்வெளி வீரர்களின் இரத்தத்திலே இது எப்போதுமே இருக்கிறது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படுவதை வெளிநாடுகள் ஒருபோதும் விரும்பாது

## அமைச்சர் விதாரண தெரிவிப்பு

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ளும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலமுறை அழைத்த போதும் அவர்கள் வந்து இணைந்து கொள்ளவில்லை இதனால்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாமல் நீண்டகாலம் இழுபடுவதாக லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த சிரேஷ்ட அமைச்சர் யாழ். யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் கடந்த 17 ஆம் திகதி சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு வலியுறுத்தியிருந்தார்.

இங்கு அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமிழர்களுக்கு ஒரு தீர்வு வேண்டும் என்று உலக நாடுகளுக்கு எல்லாம் சென்று சொல்கின்றனர். ஆனால், அதனை இலங்கையில் உள்ள அரச தலைவருடன் பேசி ஒரு தீர்வுத் திட்டத்தை வைக்க முனைவதும் இறுதியில் சிறிய ஒரு பிரச்சினையை காரணங்காட்டி வெளியேறுவதுமாக இருந்தால் தமிழ்தேசியக் கூட்டமைப்பால் ஒருபோதும் தமிழர்களுக்கான ஒரு சரியான தீர்வுத் திட்டத்தை பெற்றுக் கொடுக்க முடியாது.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் இது தொடர்பில் பலமுறை தெரிவித்திருக்கிறேன். தெரிவுக்குழுவில் இணைந்து தமிழ் மக்களுக்குத் தேவையானவற்றை முன்வையுங்கள். அதன் மூலமே நல்லதொரு தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும் என நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றேன்.

தற்போது தெரிவுக்குழுவில் அரசுடன் சமசமாஜக்கட்சி, புதிய லெனின் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, ஈ.பி.டி.பி., முஸ்லிம் காங்கிரஸ் என பல கட்சிகள் இருக்கின்றன.

தமிழ்தேசியக் கூட்டமைப்பும் இணைந்து கொண்டால் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து கொள்ளும் என ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கிறார்.

இது நல்ல ஒரு சந்தர்ப்பம். இதனை பயன்படுத்தி தெரிவுக்குழுவில் இணைந்து தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வுத் திட்டத்தை வழங்க முடியும்.

தற்போதைய அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் காணப்படுவதுடன் ஜனாதிபதியும் ஒரே கட்சியாக காணப்படுவதால் தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். இந்த நல்ல சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நழுவ விடுமானால் இந்த விவகாரம் மேலும் காலம் தாழ்த்தப்படும்.

கடந்த முறை அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற தயாராக இருந்தபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து கொள்ளாது இருந்ததால் இது செயலிழந்து போனது எனவும் குறிப்பிட்டார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி பாராளுமன்றத் தெரிவுக்குழுவை கூட்டி அரசியல் தீர்வை விரைந்து காண்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தற்போதும் வெளிநாடுகள் தீர்வை பெற்றுத் தரும் என எண்ணுகின்றார்கள். இது மாற்றம் பெற வேண்டும். தற்போது கூட்டமைப்பு இரண்டாக காணப்படுவதற்கும் இந்த வெளிநாடுகளே காரணம்.

தெளிவாக இருங்கள். இலங்கை நான்கு பக்கமும் நீரால் சூழ்ந்த ஒரு பிரதேசம். அதுமட்டுமல்ல இயற்கை வளம் பொருந்திய ஒரு நாடு. அதனால் இலங்கை முன்னேறுவதற்கு ஒரு நாடும் விடாது.

ஏதோ ஒரு பிரச்சினையை தோற்றுவித்துக் கொண்டுதான் இருக்கும். தமிழ் மக்களுக்கு பிரச்சினை தீர்ந்து விட வெளிநாடுகள் ஒருபோதும் விடப்போவதில்லை

எனவே, வெளிநாடுகளின் சொல்லுக்கு தலையாட்டாது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுத் திட்டத்தை பெற்றுக்கொள்ள தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டார்

எனவே, அவற்றை எல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் தெரிவுக்குழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இணைந்துகொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.(அ–2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 40 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-140 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 160 | 200 | 200 |
| தக்காளி | 160 | 170 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 40 | 40 |
| கோவா | 80 | 40 | 60 | 60 |
| கரட் | 160 | 80 | 120 | 140 |
| பூசணி | 60 | 30 | 40 | 50 |
| புடோல் | 60 | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 100 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 120 | 50 | 120 | 100 |
| பாகற்காய் | 120 | 100 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 70 | 80 |
| பயற்றங்காய் | 80 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 160 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 160 | 120 | 120 | 150 |
| முருங்கைக்காய் | 600 | 500 | -- | -- |
| போஞ்சி | 120 | 80 | 80 | 60 |
| கத்தரிதம்புள்ள | 25 | 30 | 40 | -- |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 60 | 50 | 80 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 50 | 40-50 |
| இராசவள்ளி | 120 | 120 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 120 | 120 | 120 | 100 |

# இராசி பலன்

*20.02.2013*
*(மாசி 08, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு*
*தசமி முன்னிரவு 9.11 மணிவரை*
*மிருகசீரிடம் மாலை 6.19 மணிவரை*
*இராகுகாலம் 12.31-2.01 மணிவரை*
*சுபநேரம் 5.01-6.31 மணிவரை*
*கச்சியப்ப சிவாச்சாரியார் குருபூசை.*

**மேடம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பகையொன்று நட்பாகலாம், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், தொழில் முன்னேற்றமுண்டு.

**இடபம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, வாக்கு மேன்மையுண்டு, தொழிலில் சில திருப்பங்கள் ஏற்படலாம், தொலைபேசி வழியில் வரும் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்** இடமாற்றம், ஊர் மாற்றம் என்பன ஏற்படலாம், தொலைபேசித் தகவல்களால் உற்சாகமடைவீர்கள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், செலவுகள் அதிகரிக்கும்.

**சிங்கம்** இனிமையான நாள், செய்தொழிலில் முன்னேற்றமுண்டு, இல்லத்தில் சுப நிகழ்வுகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, உறவினர் வருகையுண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**கன்னி** புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய திட்டங்களைத் தீட்டி வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரும் நாள்.

**துலாம்** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், தந்தை வழியில் மன நிறைவான தகவல்கள் வந்து சேரலாம், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** எடுத்த காரியத்தை முடிக்க கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், கௌரவக்குறைவான சம்பவங்கள் ஏற்படலாம்.

**தனுசு** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பயணங்களால் பலனுண்டு, நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், எடுத்த காரியங்கள் கைகூடும்.

**மகரம்** கனிவாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும், செய்தொழிலை விருத்தி செய்ய அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கும்பம்** சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயங்கள் கிடைக்கும், சந்தித்தவர்களால் சந்தோசங்கள் கூடும் நாள், சிந்தனை மிகுதியான நாள், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், கல்வியில் ஆர்வம் கூடும், சஞ்சலங்கள் அதிகரிக்கும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி பிள்ளையாரின் வெள்ளி ஆபரணங்கள் திருட்டு

யாழ்ப்பாணம் புகையிரத வீதியில் அமைக்கப்பட்டுள்ள ஆத்திசூடி பிள்ளையார் கோவிலில் பல ஆயிரம் பெறுமதியான வெள்ளி ஆபரணங்கள், பணம் ஆகியவை திருட்டு போயுள்ளது


இத்திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது.

குறித்த பிள்ளையார் கோவிலில் கருவறையின் இரு கதவுகளினையும் உடைத்து உள்நுழைந்த திருடர்கள் பிள்ளையார் சிலைக்கு போடப்பட்ட வெண்கலமான முடி, துதிக்கை என்பவற்றினை திருடியதோடு உண்டியலினையும் உடைத்து அதனுள் இருந்த பணத்திணையும் திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு பின்னரே நடைபெற்றிருக்கலாம் என கூறப்படுகின்றது.


நேற்றுக்காலை பூசை செய்வதற்காக அங்கு சென்ற பூசாரிகளாலேயே கோவிலில் திருட்டுப் போனவை குறித்து தெரியவந்துள்ளது.

அண்மையில் குறித்த வீதியில் காணப்பட்ட சைக்கிள் திருத்தும் நிலையம் ஒன்றில் கூட திருட்டு போனதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது. (அ-4)



நன்றி: மிரர்

# நயினாதீவு கடற்பரப்பில் எழுந்தருள்வார் புத்தர்



(யாழ்ப்பாணம்)

நயினை தீவுக் கடற்கரையில் மிக உயரமான புத்தர்சிலை அமைக்கப்படவுள்ளதாக நயினை தீவில் உள்ள புத்த சோலின் விகாராதிபதி ஒருவர் தெரிவித்தார்.

இப்புத்தர் சிலை அமைக்கும் ஆரம்ப கட்டப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அண்மையில் திறந்துவைக்கப்பட்ட புத்தர் கோவிலுக்கான இறங்கு துறைக்கு அருகிலேயே இப்பாரிய புத்தர் சிலை அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இப்புத்தர் சிலை மிகவும் விசாலமானதாகவும் கடற்கரையில் கடலிற்கு நீரின் மத்தியில் இச்சிலை அமைக்கப்பட்டு மின்குமிழ்கள் பொருத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

புதிதாக அமைக்கப்படவுள்ள இப்புத்தர் சிலை தியான நிலையில் சுமார் 15 அடி உயரத்திற்கும் அதிகமாக அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்புத்தர் சிலை அமைப்பிற்கான திட்டவரைபடம் புத்தர் சிலை அமைக்கப்படவுள்ள கடற்கரையில் நாட்டப்பட்டுள்ளதனையும் அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை குறித்த புத்தர் விகாரைக்கு என அமைக்கப்பட்டுள்ள இறங்குதுறைமுகம் மீனவர்கள் பயன்படுத்த முடியாது என விகாரை நிர்வாகத்தினரால் தடை போடப்பட்டு உள்ளதாகவும் அறிய முடிகின்றது. (அ-4)

# சனசமூகநிலையங்களுக்கான நிதிப்பகிர்வு இடம்பெறவில்லை

## வடமராட்சி தெ/மே ச.ச நிலையங்களின் சமாசம் குற்றச்சாட்டு

(கரணவாய்)

உள்ளூராட்சி திணைக்களத்தால் சனசமூக நிலையங்களுக்கு அரச மானியமாக வழங்கப்படும் நன்கொடை தற்போது வழங்கப்படவில்லை என வடமராட்சி தெற்கு மேற்கு சாமசத்தினர் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் சனசமூக நிலையங்களின் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாக சமாசம் குறிப்பிடுகின்றது.

உள்ளூராட்சி சபை பொறுப்பு எடுத்த காலத்திலிருந்து சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் கிடைக்கவில்லை.

முன்னர் சனசமூக நிலையங்களுக்கு ஆரம்பத்தில் 500 ரூபாவிலிருந்து 2010 ஆம் ஆண்டுவரை 5 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டு நன்கொடையாக வழங்கப்பட்டது.

இதனால் மிகவும் வறுமையில் வாழும் மக்கள் ஓரளவிற்கேனும் பத்திரிகை வாசித்தலை மேற்கொண்டனர்.

இதனால் மக்கள் பல்வேறு தகவல்களை அறியக்கூடியதாக இருந்தது.

எனினும் 2011 ஆம் ஆண்டிலிருந்து அந்த சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்குரிய நன்கொடை வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக உள்ளூராட்சி திணைக்களமோ பிரதேச சபைகளோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனால் இப்பிரதேச சபையின் கீழ் உள்ள பல சனசமூக நிலையங்கள் செயற்பட முடியாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் சனசமூக நிலையங்களுக்கு அறிவூட்டல்களை வழங்க வேண்டும் எனவும் அதன் மூலம் சனசமூக நிலையங்கள் செயற்பட முடியும் எனவும் கரவெட்டி தெற்கு மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தினர் சுட்டிக் காட்டுகின்றார்கள். (அ-3-60)

## யாழ்.செய்திகள்...

# மோ.சைக்கிள் விபத்தில் இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ்விபத்து சம்பவம் நேற்று மதியம் காக்கைதீவு சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் காக்கைத்தீவு கல்லுண்டாயினைச் சேர்ந்த இராஜேந்திரம் ரவீந்திரன் (வயது- 26) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

குறித்த விபத்தில் நேர் எதிரே பயணித்த இரு மோட்டார் சைக்கிள்களும்நேருக்கு நேர் மோதியதில் குறித்த இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

அங்கு நின்றவர்களினால் படுகாயமடைந்த இளைஞர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் யாழ்ப்பாண போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளினை மேற்கொண்டு வருகின்றனர். (அ-4)

# சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம்

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம்இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும். (அ-3-19)

# நூல் வெளியீடு

**உயில்** கலை இலக்கிய சங்கத்தினால் முதல் முறையாக வெளியிடப்படும் சி.விமலனின் **கிளை நதியின் பிரவாகம்** நூல் வெளியீடு எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யா/ தேவரையாளி இந்துக்கல்லூரி வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியர் தலைமையில் இடம்பெறும் இவ் வெளியீட்டு வைபவத்தில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்கிறார். நூலுக்கான வெளியீட்டுரையை மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணனும் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக இந்துநாகரிகத்துறை உதவி விரிவுரையாளர் தி.செல்வ மனோகரனும் ஆற்றவுள்ளனர்.முதற்பிரதியை வைஸ்ணவி நகைப் பூங்கா உரிமையாளர் லயன் ஜி. கண்ணதாசன் பெற்றுக்கொள்வார். (அ-5)

# திருப்பாடுகளின் நாடகம் இம்முறை மூன்று இடங்களில்

யாழ்.திருமறைக்கலாமன்றத்தால் ஆண்டு தோறும்கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் மாபெரும் அரங்க ஆற்றுகை நிகழ்வான திருப்பாடுகளின் நாடகம் காவியநாயகன் என்னும் பெயரில் இம்முறை மூன்று இடங்களில் மேடையேற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 21,22,23,24 ஆகிய திகதிகளில் யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ள இவ் ஆற்றுகை அதற்கு முன்பாக மார்ச் மாதம் 9, 10 ஆம் திகதிகளில் கொழும்பு மறை மாவட்டத்தின் அனுசரணையுடன் கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலய முன்றலில் 16 ஆம் திகதி இளவாலை திருமறைக் கலாமன்ற அரங்கிலும் மேடையேற்றப்படவுள் ளது.

அரங்கிலும் அரங்கப் பின்னணியிலுமாக பல நூற்றுக்கணக்கான கலைஞர்கள் பங்கேற்கின்றனர்.

திருமறைக்கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகிய காவியநாயகன் ஆற்றுகை இதற்கு முன்பாக 2001,2004,2008ஆகிய ஆண்டுகளில் மேடையேற்றப்பட்டு வரவேற்பை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சாரணர் இயக்கத்தின் சிந்தனை நாள் நிகழ்வு

யாழ்.மாவட்ட பெண்கள் சாரணர் இயக்கத்தின் வருடாந்த சிந்தனைநாள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.யாழ் சாரணிய மாவட்ட ஆணையாளர் திருமதி ரூபகுமாரி வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

தாய் சேய் நலன் என்ற தலைப்பிலான கருத்துரையை யாழ்.மாவட்ட பாடசாலைகள் சுகாதார வைத்திய அதிகாரி யோகேஸ்வரன் வழங்கவுள்ளார்.

சாரணர் தந்தையான பேடன் பவல் நினைவுதினமான பெப்ரவரி 22 ஆம் திகதியை வருடா வருடம் பெண்கள் சாரணிய இயக்கத்தின் சிந்தனை நாளாக அனுசரிப்பது குறிப்பிடக்கத்தது.

யாழ்.மாவட்ட பெணசாரணிய பொறுப்பாசிரியர்களை நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# ஏகாதசி பூசை

(தும்பளை)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிலில் நாளை வியாழக்கிழமை வீம ஏகாதசி விரதம் இரவு 7 மணியளவில் விசேட பூசையுடன்ஆரம்பமாகவுள்ளது.

ஏகாதசி புராண படலம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அதிகாலைவரை நடைபெற்று விசேட பூசையுடன் நிறைவடையவுள்ளது. (அ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவி கோருகின்றார்



சிறுநீரகம் செயலிழந்துள்ளதன் காரணமாக உயிராபத்தை எதிர்நோக்கி வரும் மாணவனிற்கு உதவிக் கரம் நீட்டி உதவுமாறு யாழ். சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட தலைவர் லயன் என்.றீ.எஸ். சுபநாதன் கேட்டுக் கொண்டுள்ளார். மேற்படி கல்திட்டிலேன் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த கிருஸ்ணன் இராகுலன் (வயது 21) என்ற மாணவனே இரு சிறுநீரகங்களும் செயலிழந்துள்ள நிலையில் பரிதாப நிலையை அடைந்துள்ளார்.

இந்நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குறித்த மாணவரின் குடும்பத்தினால் இவருக்கான மேலதிக சிகிச்சை மேற்கொள்ள முடியாத நிலையில் இம்மாணவனை காப்பாற்றுமாறு உதவிகோரியுள்ளனர். எனவே குறித்த மாணவனின் உயிரை காக்க சிறுநீரக உதவியோ அல்லது பண உதவியையோ விரைவாக தந்துதவுமாறு யாழ். மாவட்ட லயன்ஸ் கழக தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் மேலதிக தகவல்களை பெறவிரும்புவோர் மாவட்ட லயன்ஸ் கழக தலைவரின் தொலைபேசி எண்ணான 077 8448763ஐ அல்லது மாணவரின் வீட்டு தொலைபேசியான (0217900623) என்ற இலக்கத்துடனோ தொடர்பு கொள்ள முடியும். தொடர்பினை மேற்கொண்டு மேலதிகத் தகவல்களைப் பெற முடியுமென அவர் கேட்டுள்ளார். (அ-5)

# யாழ். தேசிய இளைஞர் சேவை மன்றத்துக்கு 3.5 கோடி ரூபா பெறுமதியான உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

யு.எஸ்.எயிட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு 3.5 கோடி ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக மன்றத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளரும் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தின் (நிஸ்கோ) தலைவருமான என். ஈஸ்வரராஜா தெரிவித்துள்ளார்.

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஓர் அங்கமாக செயற்படுகின்ற யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தினால் இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்படவுள்ள தொழிற்பயிற்சி தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று நேற்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,



தேசிய இளைஞர் சேவைகள் மன்றமானது இந்த மாவட்டத்திலுள்ள சகல இளைஞர் சேவைகள் மன்றத்தையும் இணைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தற்போதும் பல இளைஞர் அமைப்புக்கள் இணைக்கப்பட்டுள்ளன. எமது மன்றத்துடன் இணைக்கப்பட்டுள்ள இளைஞர் கழகங்களுக்கும் பாடசாலைகளுக்கும் பகிர்ந்தளிப்பதற்கென சுமார் 3.5 கோடி ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை யு.எஸ்.எயிட் நிறுவனம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 350 இற்கும் மேற்பட்ட இளைஞர் அமைப்புக்களுக்கும் பாடசாலைகளுக்கும் இந்த விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இளைஞர், யுவதிகளுக்காக சேவையாற்றுவதோடு அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து கிராம மட்டத்திலுள்ள திறமையானவர்களை வெளியுலகிற்கு கொண்டு வருவதும் எமது நோக்கமாகவுள்ளது.

அத்தோடு தெல்லிப்பழையில் அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட பகுதியிலுள்ள குளங்கள் மற்றும் வீதிகள், நடைபாதைகள், மைதானம் என்பனவற்றினை புனரமைப்பு செய்வதற்கென 76 இலட்சம் ரூபா நிதியினை யு.எஸ்.எயிட் நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிதியின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள புனரமைப்புப் பணிகளுக்கென 120 இளைஞர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு நாளாந்தம் தலா 350 ரூபா ஊதியமாக வழங்கப்படவுள்ளது. 4 மாத திட்டமாக இது விளங்குவதோடு இதற்கென தெரிவு செய்யப்பட்ட இளைஞர் களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

மேலும் கிராம மட்டங்களிலுள்ள இளைஞர்கள் கழகம் அமைத்து அதனைப் பதிவு செய்வதன் ஊடாக பல உதவிகளையும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் சுய தொழில் கடன் உதவிகளும் இளை ஞர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (அ-6)

# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா ஏற்பாடுகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பத்தாயிரம் வரையான யாத்திரிகர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கச்சதீவு பங்குத் தந்தை அருட்திரு ஏ.அமல்ராஜ் மேற்கொண்டுள்ளார்.

யாத்திரிகர்களுக்கான பாதுகாப்பு மற்றும் குடிநீர், மலசலகூடம், சுகாதாரம், அவசர மருத்துவம் உட்பட ஏனைய விடயங்களிலும் இலங்கை கடற்படையினரும் மாவட்ட மட்ட அரச உத்தியோகத்தர்களும் உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து செல்லும் யாத்திரிகர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதிவரை கச்சதீவுக்கு பயணம் மேற்கொள்ளமுடியும். 23 ஆம் திகதி பயணம் செய்யும் இலங்கை- இந்திய யாத்திரிகர்கள் விரும்புமிடத்து இரவு அங்கு தங்கிநின்று 24 ஆம் திகதி காலை திருவிழாவில் பங்குபற்றவும் முடியும். இலங்கை யாத்திரிகர்கள் குறிகாட்டுவான், நெடுந்தீவு துறைகளூடாக கச்சதீவுக்கு பயணம் மேற்கொள்ளமுடியும்.

குறிகாட்டுவானிலிருந்து கச்சதீவுக்கு செல்ல ஒருவழி படகுக் கட்டணமாக 300 ரூபாவும் நெடுந் தீவிலிருந்து கச்சதீவுக்குச் செல்ல ஒருவழி படகுக் கட்டணமாக 200 ரூபாவும் அறவிடப்படும். யாத்திரிகர்கள் தங்களுக்குரிய உணவினை தாமே எடுத்துவர வேண்டும்.

அவர்கள் கடந்தமுறை போன்று குறித்த தீவின் தென்மேற்கு திசையிலுள்ள அதே இறங்கு துறையில் இறங்க அனுமதிக்கப்படுவார்கள். யாத்திரிகர்கள் தங்களுடன் பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனைப் பொருட்களை எடுத்துவருதல் தடை செய்யப்பட்டுள்ளது. கச்சதீவில் உணவு கொள்முதலுக்காக ப.நோ.கூ.சங்க கிளைகள் மற்றும் தனியார், விற்பனை நிலையங்கள் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாத்திரிகர்களுக்காக குடிநீர், மலசலகூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேவை கருதி இலங்கை வங்கி, பொலிஸ் நிலையம், சுங்கத்திணைக்ளம் ஆகியவற்றின் சேவையும் பெறப்பட்டுள்ளது. அவசர தேவைகருதி Humedica நிறுவனத்தின் அம்புலன்ஸ் படகுச்சேவையும் இடம்பெறும்.

யாழ்.மாவட்டச் செயலகம், ஆளுநர் அலுவலகம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலகம், நெடுந்தீவு பிரதேசசபை, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகள், கடற்படையினர், இராணுவத்தினர், பொலிஸ் பிரிவினர் இணைந்து இவ்விழா ஒழுங்கினை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஒட்டுசுட்டான் கோட்ட

# மெய்வல்லுநர் மற்றும் தமிழ்த்தின போட்டிகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஒட்டுசுட்டான் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான கோட்டமட்ட மெய்வல்லுநர் போட்டியும் தமிழ்த்தினப் போட்டியும் நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் நடைபெறுமென ஒட்டுசுட்டான் கோட்டக்கல்விப் பணிப்பாளர் த.பங்கயச்செல்வன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய மேற்படி தினங்களில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் மெய்வல்லுநர் போட்டிகளும் தமிழ்மொழித் தினப் போட்டிகளும் எதிர்வரும் மார்ச் மாதம் 2,3 ஆம் திகதிகளில் மு/கரிப்பட்டமுறிப்பு அ.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அத்துடன் தமிழ்மொழித்தின எழுத்தாக்கத்திற்குரிய வலயமட்டப் போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (அ-3-15)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: நகைத்தொழில் (வாகனசாரதி- சவுதி)<br>தொ.இ: B -1231 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>உயரம்: 5'3"<br>கி.பா: 65.25, 2 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L, உதவிக் கணக்காளர்<br>தொ.இ: G -1247 |
| பிறப்பு: 1975இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 3, 12இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:கனடா PR (கடை சொந்தம்)<br>விவாகரத்துப் பெற்றவர்<br>தொ.இ: B -1233 | பிறப்பு: 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>உயரம்: 5'4"<br>கி.பா: 69, 12 இல் செவ்<br>தகைமை/ தொழில்: HND Management Financial Assistant<br>தொ.இ: G-1248 |
| பிறப்பு: 1973 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 1<br>உயரம்: 5'8"<br>கி.பா: 21.5, 2இல் செவ்<br>தகைமை/ தொழில்: MSc, பொறியியலாளர் (ஜேர்மன்) விவாகரத்துப் பெற்றவர்<br>எ.பா: சைவபோசனம்<br>தொ.இ: B -1234 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>உயரம்: 5'2"<br>கி.பா: 16.5<br>தகைமை/ தொழில்: BSc (Demo)<br>விவாகரத்துப்பெற்றவர்<br>எ.பா: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G -1249 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரம் 4, 12 இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, வாகனச் சாரதி<br>தொ.இ: B -1235 | பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>உயரம்: 5'<br>கி.பா: 43.25<br>தகைமை/ தொழில்: BA (Hons) ஆசிரியர்<br>தொ.இ: G -1250 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெண்களை வேலைக்கு அனுப்புவது நாட்டுக்கு இழுக்கு

## பொதுபல சேனா அமைப்பு

சுற்றுலா விசாவில் இலங்கைக்குள் வந்து சட்டவிரோதமாக மத பிரசாரங்களைச் செய்து வரும் அனைவரையும் எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என பொதுபலசேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

மகரகமவில் நடைபெற்ற பொதுபல சேனாவின் பொது மாநாட்டில் சரித்திர பிரசித்தி பெற்ற மகரகம தீர்மானம் எனும் பெயரில் குறித்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் பெண்களை வேலைக்கு அனுப்புவது இலங்கையின் நற்பெயருக்கு இழுக்காகும் மேலும் இதனால் நாட்டில் விரும்பத்தகாத சமூகப் பிரச்சினைகள் பல ஏற்படுவதுடன் அந்நாடுகளில் பெண்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலைகளில் சிக்கித் தவிக்கவும் நேரிடுகிறது என பொதுபலசேனா அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே பெண்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்கு அனுப்புவதை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

மத்திய கிழக்கு உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து வரும் பணத்தில் பாடசாலைகள் கட்டப்படுவது. வியாபாரங்களை கையகப்படுத்திக் கொள்வது, காணிகள் கொள்வனவு செய்யப்படுவது போன்ற நாட்டின் பாதுகாப்பிற்கும் இறைமைக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் நடவடிக்கைகள் தடுக்கப்பட்டு நாட்டிற்குள் வரும் பெருந்தொகைப் பணம் குறித்து அரச கட்டுப்பாடு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் எனவும் பொதுபலசேனா அமைப்பு குறிப்பிடுகிறது.

மகரகம பிரதேசத்தில் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற மாநாட்டில் சரித்திர பிரசித்தி பெற்ற மகரகம தீர்மானம் என்ற பெயரில் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் வணக்கத்திற்குரிய கலகொடஅத்தே ஞானசார தேரரினால் வெளியிடப்பட்டது. (அ-2)

# வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றவே ரணில் முயற்சி

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற ரணில் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் முயற்சித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இன்று யாழ்ப்பாணத்திற்கு சென்று உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி வரும் ஐக்கிய தேசியக்கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள், தமிழீழ விடுதலைப்புலிகள் இயங்கிய காலத்தில் வடக்கிற்கு செல்வதனை நினைத்துக்கூட பார்க்கவில்லை.

வடக்கிலிருந்து படையினரை வெளியேற்ற ரணில் கடும் முயற்சி எடுத்து வருகின்றார். இதற்கு முன்னரும் இவ்வாறான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

படையினரை வடக்கிலிருந்து வெளியேற்றிக் கொண்டால் என்ன நடக்கும் என்பதனை சிந்தித்து பார்க்க வேண்டும். வடக்கில் இராணுவத்தினரின் பிரசன்னம் எவ்வளவு முக்கியமானது என்பதனை பொதுமக்கள் கூட அறிந்து கொண்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக இராணுவத்தை வெளியேற்றுமாறு விடுக்கும் கோரிக்கை நகைப்பிற்குரியது என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வன்முறைகள் வெடிக்க வேண்டும் என்பதே சிலரது விருப்பம்-விமல்

(கொழும்பு)

நாட்டில் இனவாதத்தை மீளவும் தூண்டுவதற்கு சிலர் முயற்சித்து வருவதாக வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டில் பல்வேறு குழப்ப நிலைமைகளை ஏற்படுத்தி அதன் மூலம் மீளவும் முன்னெடுக்க முயற்சிக்கப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். இன சமூகங்களுக்கு இடையிலும் மதங்களுக்கு இடையிலும் ஏதேனும் ஓர் வழியில் முறுகல்களை ஏற்படுத்த சிலர் முயற்சித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தின் போது நன்மைகளை பெற்றுக்கொண்டவர்கள் மீளவும் வன்முறைகள் வெடிக்க வேண்டுமென விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சாவல்களை வெற்றி கொள்வதே எமது பிரதான இலக்கு என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இலங்கையில் இன்னும் பாரிய மனித புதைகுழி இருக்கலாம்

## ஆசிய மனித உரிமைகள் பணிப்பாளர்

மாத்தளையில் தோண்டியெடுக்கப்படும் மனித எச்சங்கள் உள்ள பகுதி குற்றங்கள் நிகழ்ந்த இடமாக கருதப்படுகின்றது. இதனை மாத்தளை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி அஜித் ஜெயசேன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தோண்டியெடுக்கப்பட்ட ஏலும்புகள் மற்றும் ஏனைய எச்சங்கள் வெளிநாட்டுக்கு பரிசோதனைக்காக அனுப்பப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையில் இதனை தவிர இன்னும் பல பாரிய மனித புதை குழிகள் இருக்கலாம் என்று ஆசிய மனித உரிமைகள் ஆணையக பணிப்பாளர் பெசில் பெர்னாண்டோ சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

1980 ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பி அரசாங்கத்துக்கு எதிராக நடத்திய கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்டவர்களே இந்த புதைகுழிகளில் புதைக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறினார். (அ-2)

# மரண தண்டனை தீர்ப்பு பெற்ற இலங்கையர் சார்பில் மேன்முறையீடு

(கொழும்பு)

கட்டாரில் மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள இலங்கை நபர் சார்பில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மேன்முறையீட்டுக்கான சட்ட செலவை ஏற்றுக்கொள்ள இலங்கை தூதரகம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

27 வயதான இந்தியரான ஆரிப் மொஹிதீன் என்பவரை கொலை செய்ததாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் குறித்த நபருக்கு மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது.

எனினும் கொலை செய்யப்பட்டவரின் குடும்பத்தினர் குருதிப் பணத்தை பெற்றுக் கொள்ள இணங்கியமையை அடுத்து அதனை சேகரிக்கும் நடவடிக்கைகளில் அவரது குடும்பத்தினர் ஈடுபட்டுள்ளனர். (அ-2)

# இல்ல மெய்வல்லுநர்போட்டி

இல்ல மெய்வல்லுநர் போட்டி யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய முதல்வர் கே.தேவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.சிவநாதன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர்களான திருமதி எஸ்.முத்துலிங்கம், எஸ்.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக தென்மராட்சி இளைஞர் கழகத் தலைவர் எஸ்.ரி.விமலதாஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-37)

* * * * *

(மல்லாகம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆலோசகர் கலாநிதி என். எதிர்வீரசிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இடைவேளைநிகழ்வாக கராத்தே உடற்பயிற்சி நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-2-21)

* * * * *


யா/புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் இல்லமெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஸ்ரீ.முருகதாஸ் காந்தன், சிறப்பு விருந்தினராக புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்பணி ஆர்.சி. எக்ஸ் நேசராஜா அடிகளார், கௌரவ விருந்தினராக எழுத்தாளர் குருசு முத்து இராயப்பு ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (அ-5)

# விளையாட்டுப் போட்டி பிற்போடப்பட்டது



யாழ்/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று புதன்கிழமை நடைபெற இருந்தநிலையில் சீர்ற்ற கால நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் யோ. திரவியநாதன் தெரிவித்துள்ளார். (அ-5)





வவுனியா சிதம்பரஸ்வரம் நடனாலயத்தின் கம்பன் கலை இலக்கிய மாத இதழும் ஏ.ஜே.பெலிசியனின் தயாரிப்பில் உருவான நம்ம ஊரு குறும்பட வெளியீடும் வவுனியா தம்பா கோட்டலில் அண்மையில் இடம்பெற்றபோது... (படங்கள்- பூந்தோட்டம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாய்த்தெற்கு கிராமிய அலுவலக திறப்புவிழா நிகழ்வு அண்மையில் கிராம அலுவலர் ரி. வரதராஜன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் எஸ். சிவஸ்ரீ நாடாவெட்டி கட்டடத்தை திறந்து வைப்பதையும் அலுவலகப் பதிவேட்டில் சம்பிரதாய பூர்வமாக எழுதி வேலையை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- எஸ்.செல்வ தீபன்)

# மக்களுக்கு ஆசி வேண்டி கொழும்பில் இன்று வழிபாடு

(கொழும்பு)

அனைத்து அனர்த்தங்களிலிருந்தும் இலங்கையையும் நாட்டு மக்களையும் பாதுகாத்திட இறை ஆசி வேண்டி விசேட ஆன்மீக வழிபாடு உலக சமூக நீதிக்கான தினமான இன்று கொழும்பு கோட்டை உலக வர்த்தக மையத்தின் முன்பாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு தொடர்பாக சௌமிய இளைஞர் நிதியம் விடுத்துள்ள அறிக்கையில் யுத்த அனர்த்தங்களிலிருந்து நாடும் நாட்டு மக்களும் விடுவிக்கப்பட்டவர்களாக இருந்த போதும் பல்வேறு இயற்கை மற்றும் மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களால் நாளாந்தம் ஏற்படும் அழிவுகள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

உடைமைகளும் உயிர்ச்சேதங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

இதேவேளை இன, மத ரீதியிலான அனர்த்தங்கள் நமது கதவுகளை தட்டிக்கொண்டு இருக்கின்றன. இந்நிலையில் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் பொலிஸ்மா அதிபரினால் மதங்களுக்கெதிராக ஏற்படுத்தப்படும் அசம்பாவிதங்களை தடுக்க விசேட பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு மக்களது பங்களிப்பும் அனர்த்தங்களை தடுத்து நிறுத்த இறைவனின் ஆசீர்வாதம் மிக்க பிரார்த்தனை அவசியமானதும் முக்கியமானதுமாகும். இதனை கருத்திற்கொண்டே நிதியம் இவ்வாறான ஆன்மீக வழிபாட்டினை ஏற்பாடு செய்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# பொதுக்கூட்டம்

(மல்லாகம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சைவப்புலவர் சங்கத்தலைவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

இதன்போது சைவப்புலவர் பரீட்சை தேர்வு பற்றிய விடயங்களும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. எனவே அனைத்து உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் கந்த. சத்தியதாசன் கேட்டுள்ளார். (அ-2-21)

# பட்டதாரி பயிலுநர்களுக்கு இரு நாட்கள் விடுமுறைகள்

## பொது நிர்வாக அமைச்சு

பட்டதாரி பயிலுநர்களாக அரசாங்கத்தால் இணைத்துக் கொள்ளப்பட்டு ஒன்பது மாதங்கள் பூர்த்தி செய்த அனைத்து பட்டதாரி பயிலுநர்களுக்கும் இரண்டு நாட்கள் விடுமுறைகளை வழங்குவதற்கு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தரவுகள் மற்றும் தகவல்களைச் சேகரித்தல், முன்னுரிமை அடிப்படையில் கருத்திட்டங்களையும் நிகழ்ச்சி திட்டங்களையும் இனங்காணல் போன்ற செயற்பாடுகளுக்காக கடந்த 2011.12.14 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் படி இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களுக்கு கீழ் வருமாறு விடுமுறைகள் வழங்குவதற்கு கடந்த 2012.12.19 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில் ஒன்பது மாத பயிற்சிக் காலத்தை பூர்த்தி செய்துள்ள பட்டதாரி பயிலுநர்களுக்கு மாதம் ஒன்றிற்கு இரண்டு நாட்கள் அமைய விடுமுறைகள் வழங்கப்படவுள்ளன.

ஒன்பது மாதம் பூர்த்தி செய்த பெண் பட்டதாரிகளுக்கு எண்பத்துநான்கு நாள் முழு வேதனத்துடன் கூடிய பிரசவ விடுமுறைகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கடிதங்கள் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ-2)

# உயர்தர கறவை பசுக்கள் இறக்குமதி செய்யப்படும்

உயர்தர கறவைப் பசுக்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

பொலனறுவை மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்களை மேலும் ஊக்குவிக்கும் நோக்கிலேயே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பிரதேச செயலகப் பிரிவுகள்தோறும் உள்ள 295 கிராம சேவகர் பிரிவுகளில் பால் உற்பத்தியாளர்களின் தொகை தற்பொழுது அதிகரித்து வருகிறது.

இதனை கருத்திற்கொண்டே அவர்களுக்கு சிறந்த ரக கறவைப் பசுக்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு கூறியுள்ளது.(அ-2)

# காந்தி சிலை புனரமைப்புக்கு 36.31 மில்லியன் ரூபா செலவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரின் பிரதான மணிக்கூட்டுக் கோபுர சுற்றுவட்டத்தில் இருந்த காந்தி சிலை பிறிதொரு இடத்திற்கு அகற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகரை அழகுபடுத்தல் திட்டத்தின் கீழ் நகரின் மத்தியிலுள்ள பிரதான மணிக்கூட்டுக் கோபுர சுற்றுவட்டத்தின் வேலைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

இந்த நிலையிலேயே காந்தி சிலை அகற்றப்பட்டு பிறிதொரு இடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நகரின் மத்தியில் உள்ள காந்தி சதுக்கம் காந்தி பூங்காவாக மாற்றம் பெறுகிறது. தேசத்தின் மகுடம் வேலைத் திட்டத் தின் கீழ் இந்த அபிவிருத்தி இடம்பெறுகிறது.

மட்டக்களப்பு மாநகரசபை 1.98 மில்லியன் ரூபாவுக்கு வீதி அபிவிருத்திக்கான வேலைகளையும் சிலைகள் நிறுவுதல், சுற்றுவேலி அமைத்தல், கொங்கீற் இடுதல், புற்தரை அமைத்தல் உள்ளிட்ட வேலைகளை 36.31 மில்லியன் ரூபா செலவில் நகர அபிவிருத்தி அதிகார சபையும் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# 240 இலட்சம் ரூபா செலவில் நில அளவைத்திணைக்களம்



(சிவநகர்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 240 இலட்சம் ரூபா செலவில் நில அளவைத்திணைக்களம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வெவ்வேறு பிரிவுகளாக இயங்கி வந்த இத்திணைக்களத்தின் அனைத்து நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு புதிதாக அமைக்கப்பட்ட தொகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் இம்மாவட்டத்தின் நில அளவை மற்றும் இதனோடு இணைந்த அனைத்து நடவடிக்கைகளும் இலகுவாக்கப்படுவதுடன் மாவட்டத்தின் பல பாகங்களுக்கும் நன்மைகள் கிடைக்கவுள்ளன.

மேற்படி நில அளவை திணைக்கள கட்டடம் வெகு விரைவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்படவுள்ளது. (அ-2-25)

# மனமாற்றம் பெறுவோம்; பேறுபெற்றவர்களாவோம்

## தவக்கால சிந்தனை



நினிவே நகரத்தில் வாழ்ந்த மக்கள் தாம் பாவ வாழ்வில் வாழ்கின்றோம் என எடுத்துக் காட்டப்பட்டும் மனம் திரும்புவதற்கான அறை கூவல் விடப்பட்டபோது குறைகூறவில்லை, ஏளனம் செய்யவில்லை, தள்ளிப் போடவில்லை. மாறாக உடனே அந்த அறை கூவலை ஏற்றுக்கொண்டார்கள். தங்கள் வாழ்வை மாற்றிக்கொண்டார்கள்.

அசாதாரண நிகழ்வுகள் புலன்களுக்கு எழுச்சி தரக்கூடிய அடையாளங்கள். கவர்ச்சியான வார்த்தைகள், காட்சிகள் இவற்றை இன்றைய மனித மனம் தேடுகின்றது. இதனால் மனித மனம் அடிமைப்படுகின்றது. விடுதலை அடைவதில்லை. மனமாற்றம் என்னும் இறையரசின் நுழைவுச் சீட்டு வெறும் எழுச்சியில் கிடைப்பதல்ல. மாறாக இதயத்தை இறைவனின் அருள்செயலுக்கு எழுப்புவதன் மூலம் கிடைப்பதாகும்.

இந்த மனமாற்றம் மனிதனின் விடுதலைக்கு அவசியம். நினிவே மக்கள் தங்கள் நெஞ்சங்களை இறைவார்த்தைக்கு திறந்து வைத்ததால் அவர்கள் இதயங்கள் திறக்கப்பட்டன. மனமாற்றம் விளைந்து நாமும் நம் இதயத்தை வருடும் இறைவனின் அருளடையாளங்களை நமக்கு வெளியே அல்ல நம் உள்ளத்திற்குள் உணர்ந்து கொள்வோம்.

இயேசு தம் தலைமுறை மக்களை நினிவே நகர மக்களோடு ஒப்பிட்டு நினிவே நகர மக்களைப் பாராட்டுகிறார். தமது தலை முறையினரைக் கண்டனம் செய்கிறார். இந்த வாசகத்தின் மூலம் இன்று நாமும் நினிவே நகர மக்களோடு ஒப்பிடப்படுகிறோம்.


இத்தவக்காலம் மீண்டும் ஒருமுறை நமது வாழ்வை ஆய்வு செய்ய, மாற்றிக்கொள்ள அழைப்பு விடுக்கிறது. நாம் என்ன செய்கிறோம். அலட்சியம் செய்கிறோமா? புறக்கணிக்கிறோமா? ஒத்திப்போடுகிறோமா? அல்லது நினிவே நகர மக்களைப்போல உடனே கீழ்ப்படிகிறோமா? உடனே செயற்பட்டால் நினிவே மக்களைப்போல நாமும் பேறுபெற்றவர்களாவோம். அல்லது கண்டனம் செய்யப்படுவோம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அலைகள் ஓய்வதில்லை




ராமையா ஓர் எளிய விவசாயி. அவனுக்குச் சொந்தமானது மூன்று ஏக்கர் நிலம். சற்றே வறண்டபூமி. ஆதலால் மோட்டர் வைத்து தன் வயலுக்கு நீர் பாய்ச்சி வந்தான். ஒருநாள் மின்சார மோட்டரில் மின் கசிவு ஏற்பட்டு மின் அதிர்ச்சியினால் தாக்குண்டு அவன் இறந்துபோக குடும்பத்தைச் சமாளிக்கும் பொறுப்பு அவனுடைய ஒரே மகனான முருகன் மீது விழுந்த்து. பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த அவன் படிப்பை நிறுத்திவிட்டு விவசாயம் செய்ய ஆரம்பித்தான். ஒரு ஏக்கர் நிலத்தை விற்று தன் தந்தை விட்டுக்குச் சென்ற கடன்களை அடைத்தான்.

ஆரம்பத்திலிருந்தே ராமையா தன்னுடைய மகனின் கல்விக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து விவசாயத்தைக் கற்றுக் கொடுக்கவில்லை. ஆதலால் முருகன் தன் தொழிலில் மிகவும் சிரமப்பட்டான். போதாக் குறைக்குத் தொடர்ந்து சில ஆண்டுகள் பருவமழை பொய்த்தது.

## அம்புலிமாமா கதைகள்

அடுத்து ஓரிரு ஆண்டுகள் வெள்ளம் ஏற்பட்டது. பின்பு பயிரில் பூச்சிகள் தாக்கி விளைச்சலைக் கெடுத்தன. இவ்வாறு தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக அவன் நிலத்தில் விவசாயமே சரிவர நடைபெறவில்லை. தன் நண்பர்களையும் வயதில் பெரியவர்களையும் கலந்துகொண்டு யோசனை கேட்டான். ஒரு சிலர் நகரத்திற்குச் சென்று கூலிவேலைக்குச் செல்லச்சொன்னார்கள். தன்னுடைய சொந்த நிலத்தில் உரிமையுடன் விவசாயம் செய்தபின் நகரத்தில் கண்டவனிடம் கை கட்டி சேவகம் செய்ய விரும்பவில்லை. ஒரு சிலர் வியாபாரம் செய்யுமாறு யோசனை கூறினர். முன்னனுபவமின்றி வியாபாரத்தில் இறங்கினோன். ஏற்படப் போகும் பிரச்சினைகளை சமாளிக்க தைரியம் எழவில்லை.



கடைசியில் தற்கொலை செய்துகொண்டு தன் பிரச்சினைகளுக்கு முடிவுகாண விரும்பினான். தன் முடிவைச் செயலாக்க நினைத்து கடலில் மூழ்கப் புறப்பட்டான்.

கடற்கரையை அணுகிய போது கடலோரமாக இருந்த மீனவர்களின் குடிசைகள் தென்பட்டன. அங்கு ஒருகுடிசை வாயிலில் அவன் கண்ட காட்சி அவனைச் சற்று நிற்கத் தூண்டியது. அங்கு ஒரு சிறிய பெண் குழந்தை குடிசை வாயிலில் நடக்கப் பழகிக்கொண்டிருந்தது. ஆனால் இரண்டு அடி எடுத்து வைத்ததுமே தட்டுத்தடுமாறி கீழே விழுந்தது. பின்பு கஷ்டப்பட்டு எழுந்து நின்று மீண்டும் நடக்கமுயன்றது. திரும்பவும் இரண்டு அடி நடப்பதற்குள் தள்ளாடித்தடுமாறி கீழே விழுந்தது. கீழே விழுந்ததைப் பொருட்படுத்தாமல் மீண்டும் நடக்க முயன்று மீண்டும் விழுந்தது.

இந்தக்காட்சியை இரசித்துப் பார்த்துக்கொண்டிருந்த முருகன் தான் தற்கொலை செய்து கொள்ள வந்திருப்பதையே அந்தச் சமயத்தில் மறந்து போனான். நிதானமாக நின்று அந்தக் குழந்தையின் நடைப்பயிற்சியை உற்றுநோக்க ஆரம்பித்தான்.

அடடா இந்தக்குழந்தையின் விடாமுயற்சியை என்னவென்று சொல்வது! தன்னால் தொடர்ந்து நடக்கமுடியாது என்று தெரிந்தும் நடந்தால் விழுவோம் என்றும் விழுந்தால் அடிபட்டு வலிக்கும் என்று தெரிந்தும் அது தன் முயற்சியை கைவிடுவதில்லை. என்ன ஆச்சரியம்? என்ன சற்று உரக்கவே தனக்குள் கூறிக் கொண்டான்.


ஐயா இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது. விழுந்து விடுவோம் என்று பயந்து நடக்காமலே இருந்தால் குழந்தை எப்படி நடக்கப் பழகும்? விடாமுயற்சியே வெற்றிக்கு வழிவகுக்கும் என்று உண்மையை ஆண்டவன் குழந்தைகளுக்கு தெரியப்படுத்திவிடுகிறான் என்ற குரல் கேட்டு திரும்பிய முருகன் அங்கு ஒரு வயதான மீனவன் கையில் வலையுடன் நிற்பதைக்கண்டான்.

ஆம், ஐயா! இந்தக்குழந்தைகளிடமிருந்து நாம் இதைக் கற்றுக்கொள்ளவேண்டும். உழைக்காமல் பலன் கிடைக்காது. முயற்சி செய்யாமல் வெற்றி கிடைக்காது. வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை கண்டு பயந்தால் மனிதனால் வாழவே முடியாது. இந்த உண்மையைத் தான் அந்தக்குழந்தை உணர்த்துகின்றது என்றான் மீனவன்.

அவன் சொன்ன வாசகங்கவில் இருந்த உண்மை முருகனைத் திடுக்கிடச் செய்தது. வாழ்க்கைப் பிரச்சினைகளை சமாளிக்கப் பயந்து வாழ்க்கையை முடித்துக்கொள்ள நினைத்த தன்னைத் தடுத்து நிறுத்துவதற்காகவே கடவுள் இவ்வாறு செய்கிறாரோ என்று எண்ணினான்.

தன்னருகில் நின்றிருந்த மீனவனை மீண்டும் உற்று நோக்க அவன் ஐயா! இந்தக் கடலில் வீசும் அலைகளைப் பாருங்கள். அவைதன் நீண்ட கரங்களைப் பிடித்துக்கொண்டே வெகுதூரம் உள்ளே வர முயற்சிக்கின்றன. ஆனால் ஓர் அளவிற்கு முன்னேற முடியாமல் பின்னடைகின்றன. பல்லாயிரம் ஆண்டுகளாக இந்த அலைகள் ஓயாமல் இதையே செய்கின்றன. தன்னுடைய முயற்சியில் எத்தனை முறை தோற்றாலும் அலைகள் ஓய்வதில்லை. இவை நமக்கு உணர்த்துவது என்னவென்று தெரியுமா? ஏ! மனிதா! உன்னுடைய வாழ்க்கையும் என்னுடையது போலத் தான்! தோல்வியைக் கண்டு சலிப்படையாதே! பிரச்சினைகளைக் கண்டு அஞ்சாதே! எப்போதும் பிரச்சினைகளை எதிர்கொண்டு முன்னேற முயற்சி செய்! என்றான்.

ஆஹா! நீ சொல்வது சரி தான்! நல்லவேளை! சரியான சமயத்தில் வந்து என் கண்களைத் திறந்து விட்டாய்.



பிரச்சினைகளுக்குப் பயந்து உயிரைவிடுவது எத்தகைய அறிவீனம்? நான் அப்படிச் செய்திருந்தால் என்னையே நம்பியிருக்கும் தாய், சகோதர, சகோதரிகள் எப்படித் தவித்திருப்பார்கள்? உனக்கு நன்றி! என்று சொல்லிவிட்டு முருகன் புத்துணர்ச்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் வீடு திரும்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்றாம் உலகப்போர்

51

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

பெருசுக பேச்சுக் கேக்காதுகன்னு நல்லாத தெரியும் சின்னப்பாண்டிக்கு. ஒரு ஞாயித்துக் கெழமை பள்ளிக் கூடத்துப் பிள்ளைகள ஒண்ணு சேத்தான்.

"இந்தா பாருங்க பிள்ளைகளா... நம்ம உடம்பை நம்மதான் சுத்தமா வச்சுக்கிர்றோம். அதே மாதிரி நம்ம ஊரையும் நம்மதான் சுத்தமா வச்சுக் கணும். ஆரம்பிங்க பார்ப்போம். பெருக்கி முடிக்கிற பிள்ளைகளுக் குப் பேனா பரிசு"

வலது கையில விளக்குமாறு எடுத்து, தூர்ப்பக்கத்தத் தரையில ஒரு தட்டுத்தட்டி நுனி வெளக்குமாறுல குப்பை பெருக்கி, அடி விளக்குமாறுல அதை ஒண்ணு சேத்து அள்ளி, தங்கத்தச் சிதறவிடாத தட்டார் மாதிரி குப்பைகளச் சிந்தாம அள்ளிக் கூடையில கொட்டிக் காமிச்சான் சின்னப் பாண்டி.

அதைப் பாத்துட்டு சந்தோஷமாத் தெருக் கூட்டுதுக பிள்ளைக. படபட ன்னு படை எடுத்துப் பறக்குது பட்டாம்பூச்சிக.

கவுண்டமாரு வீட்டுவாசலத் தேவமாரு வீட்டுப்பிள்ள பெருக்குது; தேவமாரு வீட்டுவாசலப் பிள்ளை மாரு வீட்டுப் பிள்ள பெருக்குது. தாழ்த்தப்பட்டவக வீட்டுவாசல நாயக்கமாரு பய பெருக்கிறான். நாயக்கமாரு வீட்டுவாசல ராவுத்தர் வீட்டுப் பய பெருக்கிறான். ராவுத்த மாரு வீட்டுவாசல செட்டியார் வீட் டுப்பிள்ள பெருக்குது.

இப்படி மாறி மாறிப் பெருக்குதுக வேற வேற வீட்டுப் பிள்ளைக. பாக் கப் பாக்கச் சந்தோஷமா இருக்கு.

'இந்த நாடே இப்படி மாறிப் போனா நல்லாயிருக்குமில்ல' சின்னப் பாண்டி நெனச்சு நெனச்சு நெஞ்சு குளுந்து நிக்கையில பிள்ளைக மேல மளார்னு வந்து விழுகுது ஒரு தேஞ்ச விளக்கமாத்துக்கட்டை.

"ஏண்டி வெத்தலைக்குச் சுண் ணாம்பு கேட்டா வாங்கித் தராத சிறுக்கி விளக்கமாறு புடிச்சு நிக் கிறியா விளக்கமாறு? வா வீட்டுக்கு வச்சிருக்கேன் ஒனக்கு" தன் மகளைக் காது செவக்கத் திருகிக் கூட்டிக் கிட்டுப் போனா ராங்கியான ஒருத்தி.

"ஏ சின்னப்பாண்டி... இது நல்லாயிருக்காப்பா? நான் கரட்டுல கல்லு ஒடைக்கிற ஆளு. நான்தான் காஞ்சு கருவாடாப் போனேன். எம் மகன் நான் வெறகு பெறக்கவிட்ட தில்ல; வெய்யில்ல விட்டதில்ல. பொத்திப் பொத்தி வளக்கிறேன். பேனா புடிக்கிற பய கையில இப்படி விளக்கமாத்தக் கொடுத்து அசிங்கப் படுத்திட்டியேப்பா. வேணாமப்பா... இன்னைக்கோட போகட்டும் இந்தக் கூத்து"

அவன் மகனைக் கூட்டிக்கிட்டு அவன் போயிட்டான்.

இப்பிடி ரெண்டு பேரு கழண்டு போதுனுல அவுகவுக அப்பன் ஆத்தா ளுக்குப் பொத்துக்கிட்டு வந்திருச்சு புது ரோசம்.

கொஞ்சநேரத்துல தெருவே காலி யாப் போயிருச்சு.

"எங்களச் சிங்காரிச்சு மூக்கறுத்து இப்படி அனாதைகளா விட்டுட் டீகளே"ன்னு காத்துல பறந்து அலையு துக குப்பைக.

☆☆☆☆☆☆

"சரி! வீதி பெருக்கக்கூடாதுன்னு பிள்ளைகளத் தடுத்துட்டீக. இனி ஒண்ணு செய்வோம். விடியக் கருக் கல்ல உங்கள் குப்பைகள விட்டு வாசல்ல துண்டா வச்சிருங்க. நாங்க எடுத்துக்கிர்றோம்" சொல்லிட்டுப் போயிட்டான் சின்னப்பாண்டி.

விடிய்ய... குப்பைவண்டிய முன்னு க்கவிட்டுப் பின்னுக்கப் போறான் வயசுப் பயகளோட. நேத்து எப்பிடிக் கெடந்துச்சோ குப்பை அப்பிடியே கெடக்கு எல்லா வீட்டு வாசல்லயும்.

என்னா... ஏதுன்னு கேட்டா எல் லாப் பொம்பளைகளும் சொல்றாக.

"குப்பையக் கொட்டி வைக்கச் சொன்னாப் போதுமா? வாளிக்கு எங்க



போறது வாளிக்கு?"

பஞ்சாயத்துல போயிக் கெஞ்சிக் கூத்தாடி வீட்டு வீட்டுக்கு ஒரு குப்பை வாளி கொடுக்கச் சொன்னான் சின்னப்பாண்டி.

மறுநாள் குப்பை வண்டியோட போயிப் பாத்தா எந்த வீட்டு வாசல்ல யும் புதுவாளி இல்ல. சில வீட்டு வாசல்ல மட்டும் ஓட்டை வாளி, ஒடைஞ்ச வாளி, பிஞ்சவாளி, நஞ்ச வாளியில குப்பை கொட்டி வச்சிருக் காக. புதுவாளியெல்லாம் அவுக புழக்கத்துக்குப் போயிருச்சு புழக்கடை க்கு. சரி கழுதை! கோழி குருடா இருந்தா என்ன? குழம்பு ருசியா இருந்தாப் பத்தாதா? இருந்த குப்பைய எடுத்துட்டுப் போயிட்டான் சின்னப் பாண்டி.

☆☆☆☆☆☆

ஊருக்குள்ள நுழையிற ரோடு ரெண்டு பக்கமும் நாறுது. அந்த ரெண்டு பக்க ரோட்டுப் பள்ளம்தான் ராத்திரியில ஊருக்கு கக்கூசு. 'இது என் எடம்; அது உன் எடம்'ன்னு அவனவன் எல்லை காத்துவைக்க ஆரம்பிச்சுட் டான். அப்பப்ப வரப்புத் தகராறு வாய்த்தகராறு வேற நடக்கும் அவுக பொழங்கற எடத்துல.

இத ஒழிக்க என்னடா வழின்னு யோசிச்ச சின்னப்பாண்டி அது வரைக்கும் அங்க எரியாமக் கெடந்த டியூப்லைட்டுகள எரியவச்சுட்டான். ராத்திரி பகலாகிப் போச்சு. வந்து பாத்தாக அங்க 'இருக்க' வந்தவக; 'வந்தது' நின்னு போச்சு அவுகளுக்கு. லைட்டு அவுக உரிமையப் பறிக்குது. "இது எங்க எடம். அப்பன் பாட்டன் காலத்துலேயிருந்து அனுபவப் பாத்தி யதை எங்களுக்கு. இன்னைக்கு இல்லேன்னு போயிருமா?" விடுறாகல்ல அடிச்ச அடியில பொலபொலன்னு உதுந்து குருடாப் போச்சு வாழத் தண்டு விளக்கு.

திருப்பியும் இருட்டு எழுதி வச்சி ருச்சு அவுக சொத்தை அவுகளுக்கு. அடுத்த நிமிசமே அவுக உரிமைய 'அனுபவிக்க' ஆரம்பிச்சுட்டாக.

☆☆☆☆☆☆

மூணாம் தெருவுல ஒரே வீச்சம். தெருவே நாறுது. வெளியேற வழி யில்லாத சாக்கடைத் தண்ணி ஒரு கறுப்புத்தாரு பூசிக்கிட்டே நடந்து வருது தெருவழியா.

ஆளுகளோட போயி என்னான்னு பாக்குறான் சின்னப்பாண்டி. வீட்டு வாசல்ல சாக்கடைய மறிச்சுத் திண்ணையக் கட்டிப்புட்டான் காட் டுக்கருப்பன். அந்தத் திண்ணையில முட்டி நிக்குது தெருச்சாக்கடை. என்னா சொன்னாலும் திண்ணைய எடுக்க மாட்டேங்கிறான் காட்டுக் கருப்பன்.

மொதல்ல மிரட்டுனான்; அப்பறம் அழுக ஆரம்பிச்சுட்டான் "எங்காத்தா பொணத்தக் கடைசியாச் சாத்திவச்சி ருந்த திண்ணப்பா, இடிச்சா மனசு கேக்காது; விட்டுருங்க" கையெடுத்துக் கும்புடறான் காட்டுக்கருப்பன்.

"செத்துப்போன கெழவிக்காக இருக்கிற ஊரு சாகிறதா பெரியப்பா? வீடுதான் ஆத்தாளுக்கு ஞாபகச் சின்னம் திண்ணை இல்ல; இடி"

இடிச்சு எறிஞ்சதும் சாக்கடை ஓடிச் சரியாப் போயிருச்சு. ஆனா ஒரு திண்ணையப் பறி கொடுத்த காட்டுக் கருப்பன் ஊர்த் திண்ணையெல்லாம் தன் திண்ணையாக்கிட்டான்.

வீட்டுவீட்டுக்குப் போயி உக்காந் துக்கிட்டு சின்னப்பாண்டியப் பத்திக் கண்டமேனிக்குப் பொறணி பேச ஆரம்பிச்சுட்டான்.

நல்லத எப்பவும் சட்டுன்னு நம்பாதுக சனங்க; கெட்டத உடனே நம்பும். மழை வருதுன்னு சொன்னா பயப்படாத சனம், தீப்புடிச்சிருச் சுன்னு சொன்னாத் திடுக்குன்னு எந்திருச்சு ஒக்காரும் பாருங்க... அந்தக் கததான் அது.

"கருத்தமாயி மகனுக்குப் புத்தி மாறிப் போச்சப்பா. படிக்கப்போன இடத்துல கிறுக்குப் புடிச்சிருச்சு"

"காரியத்தனம் பண்ண ஆளு இருக்கு ஊருக்குள்ள. இடையில நரிக்கு எதுக்கு இந்த நாட்டாம?"

"படிச்சுப் பெரியாளா வருவான்னு பாத்தா குண்டுச்சட்டிக்குள்ள குதிரை ஓட்டுறானே வெறும்பய"

"படிச்சவனத் தேடி நாமதான போகணும். அவன் நம்மளத் தேடி எதுக்கு வாரான் 'வாரண்ட்' டு இல்லாம?"

"இந்தப் பெறவிக்கு இந்த ஊரு இப்பிடித்தானப்பா இருக்கும். தவிட் டுல தங்கம் கலந்து வச்சாலும் பவுனாவா பால் பீச்சும் பசுமாடு?"

"ஊருக்குன்னு ஒரு சுதந்திரம் இருக்கு. அதுல கருத்தமாயி மகன் ஏன் கையி வைக்கறான்?"

"எதுக்கு எல்லாரும் வாய்வலிக்க வளவளன்னு பேசிக்கிட்டு, இதுல எதோ ஒரு சூட்சமம் இருக்கப்பா. இல்லாட்டிப் பய இந்த ஆட்டம் ஆடுவானா?"

காத்துவழியா வந்துச்சு ஒரு சேதி. நெசமா பொய்யான்னுதான் தெரியல.

"சும்மா சொல்லப்பா. நாஞ் சொல்றேன்"

"அவுக வீட்டுல வந்து தங்குன வெள்ளைக்காரி காசு இதுல விளை யாடுதுன்னு பேசிக்கிறாக"

"இருந்தாலும் இருக்கும்"

"என் காதுக்கு இன்னொண்ணும் வந்துச்சு"

"அது என்னா அது"

"அந்த வெள்ளைக்காரிக்கும் சின்னப்பாண்டிக்கும் ஒரு 'தொடுப்பு' இருக்குன்னு அரசபுரசலாப் பேசிக் கிறாங்க"

"சரிதான்; தாலியில்லாத முண்டச் சியக் கூப்பிட்டு வந்தான் அண்ணன். தாலியே கட்டாத வெள்ளைக்காரியக் கூட்டிட்டு அலையிறான் தம்பி. நல்ல கதையா இருக்கே கருத்தமாயி மகன்ங்க கதை...!"

காட்டுக்கருப்பன் கொளுத்திப் போட்ட ஒத்தத் தீக்குச்சி ஊரு பூரா எரியுது காட்டுத்தீயா.

(தொடரும்)

**நல்லத எப்பவும் சட்டுன்னு நம்பாதுக சனங்க; கெட்டத உடனே நம்பும்...!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வுபெற்றாலும் சமூகத்திற்கு அச்சுறுத்தல் என்றால் கைது செய்யப்படுவர்

## முன்னாள் போராளிகள் குறித்து இராணுவ பேச்சாளர்

(கொழும்பு)

**நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் விடுதலைப்புலிகவின் போராட்டங்களில் பங்கெடுத்தவர்கள் இதுவரை புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படாதிருந்தால் அவர்கள் முறையான புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.**



கிழக்கு மாகாணத்தில் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் பலர் அண்மைக் காலங்களில் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக பிபிசி தமிழோசை எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் விடுதலைப்புலிகளின் போராட்டங்களில் பங்கெடுத்தவர்கள் இதுவரை புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படாதிருந்தால் அவர்கள் முறையான புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

சமூகத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளார்கள் என்று அடையாளம் காணப்படும் முன்னாள் போராளிகள் அனைவரும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று அவர் விளக்கமளித்தார்.

கிராமங்களில் மக்களுக்கு தொந்தரவாக இருப்பவர்கள் என்று கிடைக்கின்ற முறைப்பாடுகளின்படியே சிலர் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

ஆனால், விடுதலைப்புலிகளின் முன்னாள் தலைவர்களும் அவர்களின் போராளிகளும் கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆனால், சாதாரண குடும்ப வாழ்க்கையில் பல ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளவர்களை மட்டும் அரசு புனர்வாழ்வுக்கு உட்படுத்த நினைப்பது பற்றி கேள்வி எழுப்பியபோது குறித்த முன்னாள் தலைவர்களும் அவர்களின் போராளிகளும் இயல்பாகவே புனர்வாழ்வு அடைந்து விட்டதாகவும் அவர்களால் சமூகத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும் இராணுவப் பேச்சாளர் பதிலளித்தார்.

**வடக்கில் காணிகள் சுவீகரிக்கப்படும்**

இதேவேளை, வடக்கில் பலாலி இராணுவத் தளமும் ஏனைய இராணுவ முகாம்களும் அமைந்திருக்கும் காணிகளை இராணுவத் தேவைகளுக்காக கையகப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் தமிழோசையிடம் தெரிவித்தார்.

அதேபோல பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் போன்ற மையங்களை விஸ்தரித்து அபிவிருத்தி செய்யும் தேவைகளுக்காகவும் அரசாங்கம் குறித்த காணிகளை கையேற்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

அபிவிருத்திப் பணிகளுக்காக மக்களின் காணிகளை சுவீகரிக்க வேண்டியது அவசியம். காணிகளை இழக்கும் மக்களுக்கு இழப்பீடும் மாற்றிடங்களும் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# மலேரியா தடுப்புக்கான மருந்து தெளிக்கும் பணி

முல்லைத்தீவு மாவட்டத்தில் மலேரியா தடுப்பு இயக்கத்தினரால் மலேரியா தடுப்புக்கான மருந்து தெளிக்கும் பணி நடைபெறுவதை காண முடிகின்றது.

இது தொடர்பாக தெரியவருவது, எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மலேரியா நோயினை இலங்கை நாட்டில் இருந்து முற்றாக ஒழிக்கும் நோக்குடன் அரசு செயற்பட்டுவரும் நடவடிக்கையின் தொடர்ச்சியாகவே இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ள மலேரியா தடுப்பு மருந்தினை கொண்டு பொதுமக்கள் வசிக்கும் வீடுகள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள் உட்பட பொது கட்டடங்களுக்கும் மருந்து தெளிக்கப்படுகின்றது.

இதன் ஒரு கட்டமாக நேற்றையதினம் மாங்குளம் பிரதேச மலேரியா தடுப்பு இயக்கத்தினரால் மாங்குளத்தில் உள்ள நீதிபுரம் கிராமத்தில் உள்ள பொது மக்களது வீடுகளுக்கு மலேரியா நுளம்பு தடுப்பு மருந்து விசிறப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து ஏனைய இடங்களுக்கும் மருந்து தெளிக்கும் பணி நடைபெறவுள்ளதாக அறிய முடிகின்றது. (அ-3-15)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## முருங்கைக்கீரை, காய், விதை, வேர், பட்டை, பிசின் ஆகியவற்றின் மருத்துவ குணங்கள்

**Botanical Name-**
***Moringa oleifera***
**Family-Moringaceae**
**Engl- Drum stick tree**
**Sinh- Murunga**

20 முதல் 30 அடிவரை நன்று கிளைத்து பரவி வளரும் இலையுதிர் மரம். பக்க வேர்கள் தடித்து வளர்கின்றன. பல கிளைகளை பரப்பி வளரும். எளிதில் முறிந்து



விடும் இயல்புடையது. எவ்வளவு முதிர்ந்தாலும் மரத்தில் வைரம் பாய்வதில்லை.

மென்மையான மரம். இறகு வடிவில் பகிர்ந்த கூட்டிலை, மாற்றடுக்கு முறையில் தண்டில் உண்டாகும். காய்கள் 30 முதல் 50 செ.மீ. நீளமுள்ளது. சதைப்பற்றுள்ள விதைகள் பல.

முருங்கை இலையில் உடல் வளர்ச்சிக்குத் தேவையான பல அமினோஅமிலங்கள் உள்ளன. முருங்கை இலை, பூ, பிஞ்சு, காய், விதை, பட்டை, பிசின், வேர் முதலியவை மருந்துக்கு உதவுகின்றன.

முருங்கை இலை உடலுக்கு குளிர்ச்சியைத் தரும். இலை உடல் வலிமையும் வரட்சியையும் போக்கும். மலத்தை இளக்கும்.

முருங்கைக்காயை அடிக்கடி சமைத்து சாப்பிட்டு வந்தால் கருப்பை பலம் பெறும்.

முருங்கை மர வேர்ப்பட்டை, புழுங்கல் அசிரி, உப்பு மூன்றையும் சம அளவு எடுத்து அரைத்து கட்டிகள் மீது வைத்துக் கட்டினால் கட்டிகள் பழுத்து உடையும்.

முருங்கைப்பட்டை, உசிலம்பட்டை இரண்டையும் சம அளவு எடுத்து பொடி செய்து உடலில் பூசிக் கொண்டால் கை, கால் பிடிப்பு நீங்கும்.

முருங்கைப்பிசினை 50 கிராம், சட்டியில் போட்டு தண்ணீரை (ஒரு லீற்றர்) ஊற்றி இரவு முழுவதும் ஊற வைத்து மறுநாள் காலை அந்தத் தண்ணீரைக் குடித்து வந்தால் ஆண்மைக்குறைபாடு நீங்கும்.

முருங்கைப்பூக்களைத் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி பசும்பாலில் கலந்து குடித்தால் தாது விருத்தியாகும்.

முருங்கைப்பூவை நெல்லிச்சாறு சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் நன்றாகப் பசி எடுக்கும்.

முருங்கை வேரை பாலில் போட்டு நன்றாக கொதிக்க வைத்துக் குடித்தால் உடலில் வலு சேரும்.

முருங்கைக் காயை மிளகு, மஞ்சள், உப்பு சேர்த்து வேக வைத்துச் சாப்பிட்டால் இருமல் விலகும்.

முருங்கை வேர்ப்பட்டை, திப்பிலி இரண்டையும் சம அளவு எடுத்து பொடி செய்து தினமும் 2 கிராம் பொடியை தேனில் குழைத்துச் சாப்பிட்டால் தொண்டையில் உள்ள கபம் (சளி) இளகி வெளியேறும்.

முருங்கை ஈர்க்கு, கறிவேப்பிலை ஈர்க்கு இரண்டையும் தண்ணீரில் போட்டுக் கொதிக்கை வைத்துக் குடித்தால் வயிற்று வலி தீரும்.

✷ முருங்கைப் பட்டைச்சாறு, குப்பைமேனிச்சாறு இரண்டையும் நல்லெண்ணெய்யில் போட்டுக் காய்ச்சி தடவிக் கொண்டால் கரப்பான், சொறி, சிரங்கு முதலிய தோல் நோய்கள் குணமாகும்.

✷ முருங்கைக்கீரையோடு உப்பு சேர்த்து அவித்து தொடர்ந்து 15 நாட்களுக்கு சாப்பிட்டால் மூட்டுவலிகள் குணமாகும்.

✷ முருங்கைக் கீரைச்சாற்றில் சீரகத்தை ஊறவைத்து உலர்த்திப் பொடியாக்கி தினமும் காலை, மாலை இரு வேளையும் 2 கிராம் அளவிற்கு தேனில் குழைத்துச் சாப்பிட்டால் இதய நோய்கள், அதியுயர் இரத்த அழுத்தம் குணமாகும்.

✷ முருங்கைக் கீரைச் சாறில் மிளகு, அதிமதுரம் இரண்டையும் ஊற வைத்து உலர்த்திப் பொடியாக்கி, தினமும் 2 கிராம் அளவு தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தால் இருமல், சளி குணமாகும்.

✷ முருங்கைக் கீரையுடன் எள் சேர்த்து குடிநீர் காய்ச்சி 30 மில்லி அளவு தொடர்ந்து ஒரு வாரம் குடித்தால் தடைப்பட்ட மாதவிலக்கு சரியாகும்.

✷ முருங்கை இலைச்சாற்றில் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து தேன் கலந்து, முகத்தில் தடவினால் பருக்களும் கரும்புள்ளிகளும் மறையும்.

மருத்துவ நூல்களில் முருங்கையை ஊர்தனின் முதலி என்று சிறப்பித்து கூறப்படுகிறது. வீட்டுக்கொரு முருங்கை இருந்தால் அன்றாட காய்கறித் தேவையை இலகுவில் தீர்க்கலாம்.

முருங்கையிலை தாய்ப்பால் சுரப்பதை தூண்டக்கூடியது. எனவே, பாலூட்டும் தாய்மார் இதனை அவசியம் தமது ணவில் சேர்க்க வேண்டும்.

**திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்,**
**கைதடி.**

**100 கிராம் முருங்கையிலை, பூ, காயிலுள்ள சத்துக்கள்**

| சத்துக்கள் | முருங்கை இலை | பூ | காய் |
|---|---|---|---|
| புரதம் (கிராம்) | 6.7 | 3.6 | 2.5 |
| கொழுப்பு (கிராம்) | 1.7 | 0.8 | 0.1 |
| நார்ப்பொருள் (கிராம்) | 0.9 | 1.3 | 4.8 |
| காபோவைதரேற்று (கிராம்) | 12.5 | 7.1 | 3.7 |
| கல்சியம் (மி.கி.) | 44 | 51 | 30 |
| பொஸ்பரஸ் (மி.கி.) | 70 | 90 | 110 |
| இரும்பு (மி.கி.) | 7.0 | --- | 5.3 |
| உயிர்ச்சத்து சி (மி.கி.) | 220 | --- | 120 |
| பொட்டாசியம் (மி.கி.) | 259 | --- | 259 |
| ஒட்சாலிக்கமிலம் (மி.கி.) | 101 | --- | 101 |
| கரோட்டின் (மைக்ரோ கிராம்) | 6 780 | --- | 110 |

பிரசவித்த பெண்களுக்கு பத்தியக் கறியிலும் முருங்கைப் பிஞ்சு முக்கிய இடம் பெறுகிறது. முருங்கைப் பிஞ்சில் உயிர்ச்சத்து ஏ, கல்சியம் அதிகளவில் உண்டு.

எனினும் முருங்கைக்காயில் அதிகளவு கல்சியமும் ஒட்சாலிக்கமிலமும் இருப்பதால் சிறுநீரகக் கல் உள்ளவர்கள் இதனை உண்பதை தவிர்க்க வேண்டும்.

முருங்கைப் பூவைப் பாலில் போட்டு கொதிக்க வைத்து பின்பு அதனை அருந்த விந்து விருத்தியடையும். உடலுக்கு சக்தி கிடைக்கும்.

முருங்கை இலையை உருவிய பின்பு காம்புகளை நறுக்கிப் போட்டு மிளகு இரசம் வைத்து சோற்றுடன் உண்ண கை, கால் உடம்பின் வலிகள் யாவும் நீங்கி சிறுநீரை பெருக்கும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்களின் மூலம் உங்களின் வாழ்க்கைத்துணை அமைவது எப்படி?

**உங்களுக்கு ஏற்ற மனைவி/ கணவன் யார்?**

**முதலாம் எண்காரர்கள்** 4,13, 22,31 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களை மணப்பதே மிகவும் நல்லது. 1,4 எண்காரர்களும் இணையற்ற தம்பதிகளாய் இணைந்து வாழ்வார்கள். 2,7,8 ஆகிய எண்காரர்களையும் மணக்கலாம். முதலாம் எண்காரர்கள் காதலில் ஈடுபடாமல் (திருமணத்திற்குப் பின்பும்) இருப்பது எப்போதும் இவர்களுக்கு நல்லது. 4,2,7,8 ஆகிய எண்காரர்களில் யாரை மணந்தாலும் இவர்களுக்கு நிம்மதியான வாழ்வு உண்டு.

**இரண்டாம் எண்காரர்கள்:** 7,16,25 ஆகிய திகதிகளில் பிறந்த ஏழு எண்காரரை மணப்பதே நல்லது. இவர்களும் காதலைத் தவிர்க்கவும். இரண்டாம் எண்காரர் ஆண் என்றால் கண்டிப்பாக 7 ஆம் எண்காரப் பெண்ணை மணந்து கொள்ளலாம். கணவர் பேச்சைக் கேட்டு நடப்பார். இரண்டாம் எண்காரர் பெண் என்றால் 3, 6 ஆகிய எண்களில் பிறந்தவரை மணக்கலாம். இவர்களுக்கு மகிழ்ச்சியான மணவாழ்க்கை காத்து நிற்கிறது. இரண்டாம் எண்காரர்கள் 7,3,6 ஆகிய எண்காரர்களின் துணை அமையாவிட்டால் அடுத்து 4,8 எண்காரர்களையும் மூன்றாவதாக முதலாவது எண்காரரையும் தேர்வு செய்து மணக்கலாம். இரண்டாம் எண்கார ஆண் 8 ஆம் எண்காரப் பெண்ணும் ஜோடி சேர வேண்டாம். இருவருக்கும் இதனால் கஷ்டம் உண்டாகும். ஒன்பதாம் எண்காரர்களை 2 ஆம் எண்காரர்கள் மணப்பது நல்லதல்ல. இரண்டாம் எண்காரரை மணந்து மனமொத்த தம்பதிகளாய் வாழலாம்.

**மூன்றாம் எண்காரர்களுக்கு** 3,9 ஆகிய எண்களில் பிறந்தவர்களே சிறந்த ஜோடிகள். மூன்றாம் எண்ணிற்கு முக்கியத்துவம் கொடுக்கவும். அடுத்து 9,2 ஆகிய எண்காரர்களில் ஒருவரைத் தேர்வு செய்து ஜோடி சேரலாம்.

**4 ஆம் எண்கார ஆண்கள்** செல்வந்தராக உயர வேண்டும். அதற்காக 6,15,24 ஆகிய திகதிகளில் பிறந்த 6ஆம் எண்காரர்களில் ஒருவரைத் தேர்வு செய்து மணந்து கொள்ளவும். இந்தப் பெண்ணால் செல்வ வளம் உயரும். 4 ஆம் எண்காரப் பெண் என்றால் 8 ஆம் எண் ஆணை மணக்கலாம். 4 ஆம் எண்காரர்கள் முதலாம் எண்காரரை மணந்து கொண்டால் ஒருவருக்கொருவர் உறுதுணையான ஜோடியாக இருப்பார்கள்.

**5 ஆம் எண்காரர்கள்** 1,3,6,9 ஆகிய

## ஜோதிடக் களம்

திகதிகளில் பிறந்தவர்களையே மணக்கலாம். 5 ஆம் எண்காரரை மணக்க வேண்டாம்.திகதி, மாதம், வருடம் கூட்டிவரும் எண் 5 என்றால் அந்த எண்காரரையும் 5 எண்காரர்கள் மணக்க வேண்டாம். இதனால் குழந்தைப் பாக்கியம் உண்டாகாது. இதில் எச்சரிக்கையாக இருக்கவும். 3 எண்காரர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும். அப்படி அமையாத சூழ்நிலை என்றால் 1,9 ஆகிய எண்காரர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து மணந்து கொள்ளலாம்.

**6ஆம் எண்காரர்கள்** 1,4,5,9 ஆகிய எண்காரர்களில் ஒருவரை மணக்கலாம். 6 ஆம் எண்காரரை 6 ஆம் எண்காரர் மணக்க வேண்டாம். ஏனென்றால் ஐந்து பெண்குழந்தைகள் பிறக்கும். ஆண் குழந்தை பிறக்காது. இல்லையெனில் குழந்தை பாக்கியமே இருக்காது. 6 ஆம் எண்காரருடன் காதலோ அல்லது திருமணமாகும் சூழ்நிலையோ ஏற்பட்டால் அவரின் கூட்டு எண் 1,3,4,5,7,9 ஆக இருந்தால் மட்டுமே திருமணம் செய்து கொள்ளவும். 6 ஆம் எண்காரர்களுக்கு 4 ஆம் எண்காரர் நல்ல ஜோடியாக வாழ்நாள் முழுவதும் இருப்பர்.

**7 ஆம் எண்காரர்களுக்கு** 4 ஆம் எண்காரரும் 2 ஆம் எண்காரரும் நல்ல மனைவி/ கணவன். 8 ஆம் எண்காரர்களை முற்றிலும் தவிர்க்கவும். கமல்ஹாசன் முதல் இரு திருமணங்களிலும் தோல்வியடைந்தவர். இரண்டாவது திருமணத்தில் இரு பெண் குழந்தைகள். வாஜ்பாயும், கமல் போலவே ஏழாம் எண்காரர். ஆனால் இவர் பிரமச்சாரி. ஆனால் வளர்ப்பு மகளும் பேத்தியும் இவருக்கு உண்டு. திருமணமான 7 ஆம் எண்காரார் தன் பெயரையும் தன் மனைவி/கணவன் பெயரையும் பிறந்த எண்ணுக்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொண்டால் திருமண வாழ்வு சுகமாக இருக்கும்.

**8 ஆம் எண்காரர்களுக்கு** 6,15,24 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் நல்ல இணை. மனைவி 6 ஆம் எண்காரராக இருந்தால் செல்வவளம் அதிகரிக்கும். 1,4,8 எண்காரர்களை மணந்தாலும் சுகமான வாழ்க்கை உண்டு. 2,7,9 ஆகிய எண்காரர்களை இவர்கள் மணக்க வேண்டாம். இவர்களிடம் காதல் ஏற்பட்டாலும் தவிர்த்து விடவும். 8 ஆம் எண்காரரின் பெயர் எண் 5 அல்லது 1 என்ற அதிர்ஷ்ட எண் வரும் படி அமைந்திருந்தால் 6 அல்லது 1 எண்காரரை மணக்கலாம். பொருளாதார உயர்வு ஏற்படும். இரண்டாம் பட்சமாக 4, 8 எண்காரர்களைத் தேர்வு செய்யலாம்.

**9ஆம் எண்காரர்கள்** 9,3,6,5 ஆகிய எண்காரர்களை இவர்கள் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது நல்லது.

1,4,8,5,9 ஆகிய எண்காரர்களே அதிகம் காதல் வயப்படுகின்றனர். பிறந்த எண்ணோ, கூட்டு எண்ணோ வலுவாக இருந்தால் காதலில் வெற்றி பெறலாம். மற்றவர் எண்களும் நட்பாக இருக்க வேண்டும். ஆனால் திடீரென்று காதல் வயப்படும் 7 ஆம் எண்காரர்கள் உடனடியாகத் திருமணம் செய்து கொள்கின்றனர். நடிகர் கார்த்திக்கும் நடிகை ரேவதியும் திடீரென்று காதல் திருமணம் செய்து கொண்டனர்.

இவர்கள் இருவரும் 4 ஆம் எண்காரர்தான். கார்த்திக் திருமணம் வெற்றி. ரேவதி, கணவன் சுரேஷ் மேனனிடமிருந்து பிரிந்து வாழ்கிறார். ஆனால் சட்டப்படி பிரியவில்லை. இது 4 ஆம் எண்ணிற்கே உரிய குணம்.

# சிகரெட் பெட்டியில் வாய்ப்புற்றுநோய் குறித்து அறிவூட்டும் படங்களை வெளியிடவேண்டும்

## 10 இலட்சம் கையொப்பங்களுடன் மகஜர் கையளிப்பு

(கொழும்பு) —

**சிகரெட் பெட்டியின் 80 வீதமான பகுதியில் வாய்ப்புற்று நோய் குறித்து அறிவூட்டும் படங்களை உள்ளடக்குவது தொடர்பான சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரி 10 இலட்சம் பேரின் கையொப்பங்களடங்கிய மகஜர் ஒன்று நேற்று முன்தினம் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.**

மேற்படி சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரி விகாரமகாதேவி பூங்காவிற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டதோடு ஆர்ப்பாட்ட முடிவில் ஊர்வலமாக வந்து இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

தேசிய மனிதச் சங்கிலி மற்றும் இலங்கை போதைக்கு அடிமையாவதற்கு எதிரான அமைப்பும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது.

சிகரெட் பெட்டியின் 80 வீத பகுதியில் வாய்ப்புற்று நோய் தொடர்பாக புகைப்படங்களை உள்ளடக்குவது தொடர்பான 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசார கட்டுப்பாட்டுச் சட்டத்தை அமுல்படுத்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

இதற்கு எதிராக புகையிலை கைத்தொழிற்றுறையினர் வழக்குத் தொடர்ந்துள்ளனர். ஆனால், குறித்த சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரி நேற்று முன்தினம் காலை பெருந்திரளான மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்ட முடிவில் இது தொடர்பான மகஜர் சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜெயதிலகவிடம் கையளிக்கப்பட்டது. புகைத்தலினால் இலங்கையில் தினமும் 60 பேர் இறப்பதாக சுகாதார அமைச்சு கூறியது. உலக அளவில் வருடாந்தம் 5 மில்லியன் பேர் புகையிலை சார்ந்த இருதய நோய், புற்றுநோய், பக்கவாதம், நுரையீரல் சார்ந்த நோய்கள் என்பவற்றினால் மரணமடைகின்றனர்.

இதுதவிர உலகம் பூராகவும் 6 இலட்சம் சிறுவர்கள் மறைமுகமான புகையிலை பாதிப்புகளால் பலியாகின்றனர். இலங்கையில் நடைபெறும் மரணங்களில் 68 வீதமானவை தொற்றா நோய்களின் மூலமே ஏற்படுவதோடு இதற்கு புகை பாவனையே நேரடி காரணமாகும்.

புகைப்பழக்கத்தினால் இலங்கையில் அநேகர் புற்றுநோய், இருதய நோய், பாலியல் பலவீனங்கள் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் சிகரெட் பெட்டிகளில் வாய்ப்புற்றுநோய் தொடர்பான படங்களை உள்ளடக்கும் சட்டத்தை அமுல் படுத்த அமைச்சர் நடவடிக்கை எடுத்திருந்தார். (அ-2)

# புலிகளின் பிரசாரங்களால் மரண தண்டனை தாமதமாகியது

## ராஜீவ் கொலையாளிகளுக்கு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பிரசாரங்கள் காரணமாகவே ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை தூக்கிலிடும் நிகழ்வு பிற்போடப்பட்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் இரகசிய ஆவணம் ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக டைம்ஸ் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.

இந்திய உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியும் இந்திய ஜனாதிபதி அவர்களின் கருணை மனுக்களை நிராகரித்தும்கூட ராஜீவ்காந்தி கொலையாளிகளின் மரணதண்டனை பல வருடங்களாக நிறைவேற்றப்படாமல் உள்ளது.

இந்த நிலையில் இந்த தாமதத்துக்கு விடுதலைப் புலிகளின் நன்கு திட்டமிடப்பட்ட பிரசாரங்களும் மனித உரிமை அமைப்புக்களின் எதிர்ப்புகளுமே காரணம் என்று இந்திய இரகசிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# போதைப்பொருள் வைத்திருந்த நபருக்கு மரணதண்டனை

(கொழும்பு)

போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான நபர் ஒருவருக்கு மரண தண்டனை விதிக் கப்பட்டுள்ளது.

கேகாலை மேல் நீதிமன்றம் நேற்றையதினம் இந்த தண்டனையை வழங்கியுள்ளது.

புத்தளம், மதுரங்குளிய பிரதேசத்தில் வசிக்கும் 52 வயதான ஒருவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் இவர் கடந்த 2004 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார்.


கைது செய்யும் போது இவரிடமிருந்து 25 கிராம் போதைப் பொருள் கைப்பற்றப் பட்டது.

இவர் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ள வேளையில் இன்று மரணதண் டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராஜீவ் காந்தி கொலை வழக்கு கைதிகளில் ஒருவரான...



# பேரறிவாளனின் கடிதம்!

**தூக்குத்தண்டனை கைதிகளின் கருணை மனுக்கள் குடியரசுத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படுவது தொடர்பாக பல சர்ச்சைகள் இன்று அடிபடுகின்றன. சில கருணை மனுக்கள் குடியரசுத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு பல காரணங்கள் உள்ளன.**

**அப்படியான காரணங்களில் ஒன்று ராஜீவ் வாந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன் விடயத்திலும் உண்டு.**

**ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன் எழுதிய நீண்ட விளக்கக் கடிதத்தை இங்கு தருகிறோம்.**

இந்த நேரத்தில் எனது ஒப்புதல் வாக்குமூலம் என்று கூறப்படுவதன் நம்பகத்தன்மை பற்றி சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன்.

1. 60 நாட்களுக்கும் மேலான காவலின் பின்பு 14.08.1991 மற்றும் 15.08.1991 அன்று அதாவது, போலீஸ் காவல் முடியப்போகும் 16.08.1991 அன்றைக்கு முந்தைய நாளில் வாக்குமூலம் எடுத்ததாக கூறுவதை எவ்வாறு நம்புவது? இவ்வழக்கில் வாக்குமூலம் அளித்ததாக கூறப்படும் 17 பேரும் காவல் முடியும் ஒரு நாளுக்கு முன்புதான் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

2. இராஜீவ் கொலை வழக்கை விசாரிக்கவென அமைக்கப்பட்ட குழுவில் (சி.பி.ஐ./ சி.ஐ.டி) அங்கமாக செயல்பட்ட சாட்சி 52 காவல்துறை கண்காணிப்பாளர் தியாகராசனின் சாட்சியம் எவ்வாறு ஏற்கத்தக்கது? (நீதியரசர் தாமஸ் பக்கம் -35) இந்த இடத்தில் ஒப்புதல் வாக்குமூலங்களைப் பதிவு செய்ததாகச் சாட்சியளித்த சாட்சி 52 தியாகராசனின் சாட்சியம் ஏற்கத்தக்கதா என்பதற்கு அவர் தொடர்புடைய வேறு வழக்கு பற்றிக் கூறிட விரும்புகிறேன்.

கேரள மாநிலத்தில் நடந்த அவ்வழக்கு பற்றியும், அவ்வழக்கில் சாட்சி 52 நடந்துகொண்ட முறை பற்றியும் புரண்ட்லைன் ஏட்டில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதுவே சாட்சி 52 தியாகராசனின் நம்பகத்தன்மையை எடுத்துக் கூறுமென நம்புகிறேன். இவ்வாதத்தை நான் எனது 313, குற்றவியல் நடைமுறைச்சட்டம், பதிலுரையில் தாக்கல் செய்துள்ளேன்.

3. சாட்சி 52 தியாகராசன், தனது சாட்சியத்தில் 14.08.1991 அன்று இரவு 11 மணிக்கு சற்று முன்னதாக, பூந்தமல்லி கிளைச் சிறைக்கு வந்து எதிரி ராபர்ட் பயஸ் என்பவரிடம் வாக்குமூலம் தொடர்பான முதல்நாள் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறுகிறார். இந்த நடவடிக்கை அரை மணி நேரம் நீடித்தது என்றும் கூறுகிறார்.

ஆனால், இவரே வேறு இடத்தில் எனது வாக்குமூலம் தொடர்பாக சாட்சியமளிக்கும்போது, 14.08.1991 அன்று இரவு 11.30 மணிக்குச் சற்று முன்னதாக, பூந்தமல்லி கிளைச் சிறை வந்து எனது வாக்குமூலம் தொடர்பான முதல்நாள் நடவடிக்கையை மேற்கொண்டதாகக் கூறுகிறார். இதிலிருந்தே இவர், முன்பே தயார் செய்யப்பட்ட ஆவணங்களைக் கொண்டு இயந்திரத்தனமாக சாட்சியமளித்துள்ளது தெரிகிறது.

4. எனது ஒப்புதல் வாக்குமூலம் எனப்படுவதன் முதல்நாள் நடவடிக்கையின் இறுதியில் எனது பெயருக்கு பதிலாக ராபர்ட் பயஸ் பெயர் எழுதப்பட்டுள்ளது. என்னை முன்னிலையில் வைத்துக்கொண்டு முறையாக இந்த ஆவணம் தயார் செய்யப்பட்டிருந்தால் பெயர் மாற்றம் வருமா?

5. ஒப்புதல் வாக்குமூலப்படி 03.05.1991, 04.05.1991 ஆகிய நாட்களில் நான் சென்னையில் இருப்பதாக உள்ளது. ஆனால், சாட்சி 75 வசந்தகுமார் என்பவரின் சாட்சிப்படி 3 அல்லது 4 ஆம் திகதி அவருடன் நான் திருச்சியில் இருப்பதாக உள்ளது.

6. எனது வாக்குமூலத்தின்படி ஹரிபாபுவிற்கு நான் படச்சுருள் கொடுத்ததாகவும் பாக்கியநாதனின் வாக்குமூலத்தில் அவர் கொடுத்ததாகவும் சாட்சி 72 இராமமூர்த்தி என்பவரின் 164 குற்றவியல் நடைமுறைச் சட்டம் வாக்குமூலப்படி சுபா சுந்தரம் கொடுத்தார் எனவும் உள்ளது. சம்பவ இடத்தில் ஹரிபாபு பயன்படுத்தியது ஒரு படச்சுருள் என்று கூறப்படுகிறது. இறுதியில் என்மீது குற்றம் சாட்டப்படுகிறது எப்படி?

7. வாக்குமூலத்தின்படி நான் மே மாதம் முதல்வாரம் ரெண்டு, 9 வோலட் மின்கலம் வாங்கியதாக உள்ளது. இதன் அடிப்படையிலே என்மீது மே மாதம் முதல்வாரம் எனக் குறிப்பிட்டு குற்றச்சாட்டு வரையப்படுகிறது. நீதியரசர் வாத்வா (பக்கம் 300) ஆனால், சாட்சி 91 மொய்தீன் என்ற கடைக்காரர் சாட்சிப்படி மே மாதம் இரண்டாம் வாரம் என்றுள்ளது.

8. வாக்குமூலத்தில் சிவராசன் அந்த இரண்டு மின்கலங்களையும் குண்டு வெடிக்கச் செய்ய பயன்படுத்தியதாக காணப்படுகிறது. ஆனால், நிபுணர்களான சாட்சிகள் 252 சீனிவாசன், 257 மேஜர் சபர்வால், 280 சந்திரசேகரன் ஆகியோர் சாட்சியப்படி ஒரு பேட்டரிதான் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

9. சாட்சி 75 வசந்தகுமார் சிவராசனின் நெருங்கிய கூட்டாளி என்று வாக்குமூலத்தில் உள்ளது. ஆனால், அவரோ தனக்கு சிவராசனின் பெயர் கூடத் தெரியாது என சாட்சியமளித்துள்ளார்.

10. 22.05.1991 அன்று பாக்கியநாதன் வீட்டிலிருந்து எனது பொருட்களை கொண்டுசென்றதாக வாக்குமூலத்தில் உள்ளது. ஆனால், விசாரணை அதிகாரி சாட்சி 288 இரகோத்தமன் சாட்சியம், சான்றாவணம் 1344 என்பவற்றில் 24.05.1991 என்று காணப்படுகிறது.

11. எனது வாக்குமூலப்படி 23.05.1991 அன்று ஹரிபாபுவின் உடலை எடுப்பது தொடர்பாக சுபா சுந்தரத்திடம் கூறுமாறு சிவராசன் கேட்டுக் கொண்டதாக உள்ளது. ஆனால், பாக்கியநாதனின் வாக்குமூலப்படி ஹரிபாபுவின் வீட்டு முகவரியை அறிவதற்காக சுபா சுந்தரத்திடம் சென்றதாக உள்ளது. மேற்சொன்வை சில உதாரணங்களே. இதுபோல் பலவும் உண்டு. காரணம், நடந்தவற்றை எழுதியிருந்தால் முரண்பட வாய்ப்பில்லை.


வாக்குமூலத்தில் உள்ள அனைத்துமே பொய் என்று கூறிவிட முடியாது. ஒருசில உண்மைகளைக் கொண்டு தங்களது வழக்கிற்கு ஏற்ப எழுதிய கதைதான் இந்த வாக்குமூலங்கள். இத்தனை முரண்பாடுகளைக் கொண்ட வாக்குமூலத்தை நம்பித்தான் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

எமது கடுமையான மறுப்பிற்குப் பின்னரும் வாக்குமூலங்கள் ஏற்கப்பட்டாலும் கூட- ஒரு வாதத்திற்காக அவற்றை ஏற்றுக்கொண்டாலும் எனக்குச் சாதகமான சங்கதிகள் பலவும் அதில் உள்ளன. அவற்றைத் தங்களது பார்வைக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1. வாக்குமூலத்தில் உள்ளபடி நான் விடுதலைப் புலிகளுக்காக மாதச் சம்பளத்தற்கு வேலை செய்கிறேன். பல விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு வேலை செய்ததாகவும், சிவராசன் ஒரு சீனியர் விடுதலைப்புலி என்பதால் வேலை செய்ய ஒப்புக்கொண்டேன் என்றும் காணப்படுகிறது. எங்கும் கொலைச் செயலுக்கு ஒப்புக் கொண்டு வேலை செய்ததாகக் காணப்படவில்லை.

2. எக்ஸ் பி. 392 என்ற 07.05.1991 திகதியிட்ட கம்பியில்லாச் செய்தியின்படி சிவராசன், சுபா, தனு ஆகிய மூவருக்கு மட்டுமே சதித்திட்டம் தெரியும் என்று உள்ளது. இதை நீதியரசர்களும் ஒப்புக்கொள்கின்றனர். எனது வாக்குமூலத்தின்படி நான் 07.05.1991க்கு முன்புதான் சிவராசனுக்கு மோட்டார் சைக்கிள், பட்டரி, 9 வோல்ட் பட்டரி ஆகியவை வாங்கித் தருகிறேன் எனவே உள் நோக்கம் தெரிந்து வாங்கித்தர நியாயமில்லை.

3. 21.05.1991 அன்று இரவு 9.30 மணிக்கு அதாவது சம்பவம் நடைபெறும்போது பாக்கியநாதனுடன் சினிமா பார்க்கச் சென்றதாக வாக்குமூலத்தில் உள்ளது. உண்மையில் எனக்கு சம்பவத்தின் விவரம் முன்பே தெரிந்திருந்தால், சதியாளனாக இருந்தால், குற்றம் நடக்கும் நேரத்தில் நண்பருடன் சினிமா பார்க்க முடியுமா? (சினிமா பார்த்துவிட்டுத் திரும்பி வரும் வழியில்தான் ராஜீவ் கொலை பற்றி அறிந்ததாக வாக்குமூலத்தில் உள்ளது.



4. 23.05.1991 அன்று காலை சம்பவ விவரங்களை சிவராசன் கூறுவதாகவும், மாலை நளினி விவரித்தார் எனவும் வாக்குமூலத்தில் காணப்படுகிறது. உடனே நான் பாக்கியநாதன் வீட்டில் தங்கியிருப்பது உசிதமாகப்படவில்லை என்று கருதி இடம்மாறிச் சென்றுவிடுவதாக உள்ளது. எனவே சம்பவத்தைப்பற்றி முன்பே தெரிந்திருந்தால் 21.05.1991க்கு முன்பே வேறு இடம் சென்றிருப்பேன். சிவராசன் நளினி ஆகியோர் மூலம் 23.05.1991 அன்று தெரியவந்ததால்தான் அன்று இடம் மாறுவதாக உள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு மற்றும் தனியார் பாடசாலைகள் அனைத்தும் கல்வி அமைச்சின் நிர்வாகத்துக்கு கட்டுப்படவேண்டும்

## ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

நாட்டில் இயங்கும் சகல தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளின் செயற்பாடுகளும் கல்வி அமைச்சின் நியமனங்கள் மற்றும் சட்ட திட்டங்களுக்கு கீழ் கொண்டு வரப்படுவது அவசியமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க சட்டங்களை வகுத்துச் செயற்படுத்துமாறு ஜனாதிபதி நேற்று முன்தினம் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் இது தொடர்பில் குறிப்பிட்ட போதே அவர் இவ்வாறு பணித்துள்ளார்.

இங்கு வெவ்வேறு நாடுகள் கிடையாது. நாட்டில் அரச பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் என்ற பேதங்களுக்கு இடமில்லை. சகல பாடசாலைகளும் கல்வி அமைச்சின் நிர்வாகத்தின் செயற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டே இயங்க வேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் தாய்மொழி, சமயம் மற்றும் வரலாறு கண்டிப்பாகக் கற்பிக்க வேண்டுமெனவும் சர்வதேச பாடசாலையில் கல்வி கற்றாலும் இந்த நாட்டிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் தாய்மொழியும் நாட்டின் வரலாறும் சமய நல்வழிமுறைகளும் தெரிந்திருப்பது மிக முக்கியம் எனவும் குறிப்பிட்டார்.

சர்வதேச பாடசாலைகள் தொடர்பாகத் தமக்கு பல முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகத் தெரிவித்த ஜனாதிபதி ஒழுக்கத்துக்கு முக்கியத்துவமளித்து தாய்மொழி, எமது வரலாறு ஆகியவற்றில் எமது எதிர்கால சந்ததியினர் தேர்ச்சியுள்ளவர்களாகத் திகழ்வது அவசியம் எனவும் கேட்டுக் கொண்டார்.

சர்வதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் பல மாணவர்களுக்குத் தாய்மொழி தெரியாது. இந்த மோசமான நிலை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இது தொடர்பில் கொள்கை ரீதியான தீர்மானம் முக்கியமானதாகும்.

கல்வித்துறையில் நிலவும் குறைபாடுகள் மக்கள் மத்தியிலிருந்து வெளிப்படும் முறைப்பாடுகள், ஆசிரியர் பற்றாக்குறை, அதிபர் பற்றாக்குறை, அதிபர், ஆசிரியர்களின் செயற்பாடுகள், முதலாம் தரத்தில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் எதிர்நோக்க நேரும் நெருக்கடிகள் சர்வதேச விடயங்கள் இங்கு கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டன.

இவற்றில் சிலவற்றுக்கு உடனடித் தீர்வும் வழிகாட்டல்களும் ஏனையவற்றுக்குத் தீர்வு பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டன.

இதேவேளை பாடசாலைகள் பல நூறு வருடம், நூற்றி இருபத்தைந்து வருடம் பழைமைவாய்ந்த கட்டடங்களைக் கொண்டுள்ளன. இதனைப் புனரமைப்பதற்கோ அல்லது மீள் நிர்மாணம் செய்வதற்கோ பெருமளவு நிதி தேவைப்படுகின்றது என்பதைக் கல்வியமைச்சர் ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை சில பாடசாலைகளில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கட்டடங்களின் செயற்பாடுகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# கியூபா தூதுவர் பதவியை தமரா குணநாயகம் ஏற்க மறுப்பு



இலங்கையின் சிரேஷ்ட இராஜதந்திரிகளில் ஒருவரான தமரா குணநாயகம் தூதுவர் பதவியை ஏற்றுக் கொள்ளவில்லை என சிங்களப் பத்திரிகையொன்று தகவலை வெளியிட்டுள்ளது.

கியூபா மற்றும் ஆர்ஜென்டீனாவிற்கான தூதுவர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு குணநாயகத்திடம் கோரப்பட்டிருந்தது.

எனினும் தமரா குணநாயகம் இந்தப் பதவியை ஏற்றுக் கொள்வதனை நிராகரித்துள்ளார். இதன்படி கியூபா மற்றும் ஆர்ஜென்டீனாவிற்கான இலங்கைத் தூதுவராக வெளிவிவகார அமைச்சின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சரத் திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கைப் பிரதிநிதியாக பதவி வகித்து வந்த குணநாயகத்தை அரசாங்கம் அந்தப் பதவியிலிருந்து நீக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




★1627- யாழ்ப்பாணத்தைத் தாக்கிய சூறாவளியில் சிக்கி பலர் இறந்தனர்.

★1798- பாப்பரசர் ஆறாம் பயஸ் பதவியில் இருந்து விலகினார்.

★1835- சிலியின் கொன்செப்சியோன் நகரம் நிலநடுக்கத்தில் அழிந்தது.

★1910- எகிப்தியப் பிரதமர் பூட்ரோஸ் காலி கொல்லப்பட்டார்.

★1944- இரண்டாம் 1547-6 ஆம் எட்வேர்ட் லண்டனின் மன்னனாக முடிசூடினான். உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா எனிவெட்டாக் தீவைக் கைப்பற்றியது.

★1962- மேர்க்குரி திட்டம்:ஜோன் கிளென் பூமியை மூன்று முறை சுற்றி பூமியைச் சுற்றிய முதலாவது அமெரிக்கர் என்ற புகழைப் பெற்றார்.

★1965-அப்பலோ விண்கலங்கள் சந்திரனில் இறங்குவதற்கான இடங்களை வெற்றிகரமாகப் படங்கள் எடுத்த ரேஞ்சர் 8 விண்கலம் சந்திரனுடன் மோதியது.

★1987- அருணாசலப் பிரதேசம் அசாமில் இருந்து பிரிந்து தனி மாநிலமாகியது.

★2002-எகிப்தில் தொடரூந்து ஒன்று தீப்பிடித்ததில் 370 பேர் பலியாகினர்.

**பிறப்புக்கள்**

★1876- கா.நமச்சிவாயம், தமிழறிஞர் (இ.1936)

★1937-றொபேர்ட் ஹியூபர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய வேதியியலாளர்

★1945 -ஜியார்ஜ் ஸ்மூட், அமெரிக்க விண்ணியல் அறிஞர்

★1963-சார்ல்ஸ் பார்க்லி, அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

★1977- ஸ்டெஃபான் மார்பெரி, அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புக்கள்**

★1896-ஆனோல்ட் சதாசிவம்பிள்ளை, ஈழத்தின் தமிழறிஞர் புலவர் (பி.1820)

★1907-ஹென்றி முவாசான், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு வேதியியலாளர் (பி.1852)

★1916-கிளாஸ் ஆர்னல்ட்சன், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி.1844)


★1972-மரீயா கோப்பர்ட்- மேயெர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (பி.1906)

★1976-ரெனே காசின், நோபல் பரிசு பெற்றவர் (பி.1887)

★2008-டி.ஜி.எஸ்.தினகரன், கிறித்தவ மறைப்பரப்புநர் (பி.1935)

★2011-மலேசியா வாசுதேவன், பாடகர், நடிகர்.

**மலேசியா வாசுதேவன்**



வாசுதேவன் கேரளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மலேசியாவைச் சேர்ந்த சத்து நாயர் – அம்மாளு தம்பதியருக்கு 8 ஆவது மகனாகப் பிறந்தார் வாசுதேவன். மலேசியா வில் தமிழர் இசைக் குழு ஒன்றில் முக்கிய பாட கராக விளங்கினார்.

மலேசியாவில் பல நாடகங்களில் நடித்த அனுபவத்தை நம்பிக்கையாகக் கொண்டு சென்னை வந்து திரைப்பட வாய்ப்புக்களைத் தேடினார். மலேசியத் தமிழர்கள் கூட்டாகத் தயாரித்த இரத்தப் பேய் என்ற தமிழ்ப் படத்தில் முதல் முறையாக நடிகனாக அறிமுகமானார்.

1970 களில் விளம்பர நிறுவனங்களுக்காக 45 ஆவணப் படங்களில் நடித்துள்ளதுடன் இளையராஜாவின் பாவலர் பிரதர்ஸ் குழுவில் பல மேடைக் கச்சேரிகளிலும் பாடி வந்தார்.

தொடர்ந்து தென்னிந்திய திரைப்படங்களிலும் பாடகராக அறிமுகமான மலேசியா வாசுதேவன் ஒரு கைதியின் டைரி படத்தில் வில்லனாக நடித்தார். அதன் பின்னர் 85 வரையான திரைப்படங்களில் நடித்திருந்தார். தொடர்ந்து தொலைக்காட்சியில் சிலந்தி வலை உட்பட ஏராளமான தொலைக்காட்சித் தொடர்களில் நடித்ததுடன் சில திரைப்படங்களுக்கு திரைக்கதை வசனம் என்பவற்றையும் உருவாக்கினார்.

இவரது கலைத்திறமையை பாராட்டி இவருக்கு தமிழக அரசின் கலைமாமணி விருது வழங்கப்பட்டது. இறுதிக்காலத்தில் சில ஆண்டுகளாக பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட வாசுதேவன் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி காலமானார்.

# போர் வெற்றி கொள்ளப்பட்ட போதிலும் சமாதானம் தோல்வி அடைந்துள்ளது!

## சந்திரிகா தெரிவிப்பு

போர் வெற்றிகொள்ளப்பட்ட போதிலும் சமாதானம் தோல்வியடைந்துள்ளது என்பதனை தைரியமாக சொல்ல முடியும் என முன்னாள் ஜனா திபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் கட்சியின் தலைவர் விஜயகுமாரதுங்கவின் நினைவு நிகழ்வில் கலந்து கொண்டபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் ,

வாழ்க்கைச் சரிதத்தை விரைவில் எழுதி வெளியிடத்திட்டமிட்டுள்ளேன்.மக்களின் கட்சியின் கொள்கைகள் குறித்து அமைச்சர் ராஜித சேனாரட்ன கருத்து வெளியிட்டமை மகிழ்ச்சி அளிக்கிறது.

இன்றைய சூழ்நிலைகளின் அடிப்படையில் கருத்து வெளியிடுவோருக்கு நாளை என்னவாகும் என்று தெரியாது.

கடந்த ஏழு ஆண்டுகளாகவே நான் துன்புறுத்தப்பட்டுள்ளேன். ஊடகங்கள் இது குறித்து கேள்வி எழுப்புகின்றன. நான் அழுத்தங்கள் பற்றிய தகவல்களை வெளியிடப் போவதில்லை.

அனைத்து மக்களும் அனைத்து நிலைமைகளும் மாற்றமடையும் என்ற கௌதம புத்தரின் கோட்பாட்டை நான் நம்புகின்றேன் என சந்திரிகா தெரிவித்துள்ளார். (அ-2)

# தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலமே தீர்வு கிடைக்கும்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

இலங்கை- இந்திய மீனவர்களுக்கு இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஜீ.ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரத்தில் கட்சி கிளையொன்றை திறந்து வைத்து உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இரு தரப்பினரும் சுமுகமான முறையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். இரு நாடுகளினதும் மீனவர்கள் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டுமென தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகம் உவந்த தமிழறிஞர் தனிநாயகம் அடிகளார்




பக்திக்கு மொழி சொன்ன ஒரு தமிழ்ப் பிரியரை நம்முடைய மண் உலகுக்குத் தந்துள்ளது. யாழ்ப்பாணம் நெடுந்தீவைச் சேர்ந்த ஸ்தனிஸ்லாஸ் கணபதிப்பிள்ளை செசில் இராசம்மா தம்பதியினருக்கு 1913 ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் இரண்டாம்நாள் சேவியர் ஸ்தனிஸ்லாஸ் குழந்தையாகப் பிறந்தார். அப்பிள்ளைதான் பின்னர் வண.பிதா சேவியர் தனிநாயகம் அடிகளானார். பக்தியின் மொழி தமிழ் என்ற சிறப்பினைத் தமிழ் அன்னைக்கு வழங்கியவர் அவர்தான்.

தன்னுடைய தமிழ்மொழியின் இலக்கியச் செழுமையினையும் நீண்ட பாரம்பரியத்தையும் நன்குணர்ந்த அடிகளார் அவ்வுண்மைச் செய்தியினை உலகமெல்லாம் பரப்பவேண்டும் என்று எண்ணினார். உலகின் பல நாடுகளுக்குச் சென்று அவரவர் மொழிகளிலே தமிழ்மொழியின், தமிழ் இலக்கியத்தின், தமிழ்ப்பண்பாட்டின் சிறப்புக்களை எடுத்துக்கூறினார்.

ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், இத்தாலியம், பிரெஞ்சு, ஸ்பானிஸ், ஜேர்மன் ஆகிய மொழிகளிலே புலமையுடையவர், சமஸ்கிருதம், மலையாளம், போர்த்துக்கீசம், எபிரேயம், மலாய், ரஷ்யன் ஆகிய மொழிகளையும் அறிந்தவர். இதனால் அவருடைய தமிழ்த்தூது பயனுடையதாக அமைந்தது. இவ்வாறு அவர் மேற்கொண்ட தமிழ்த்தூது பயண அனுபவங்களையெல்லாம் தமிழ்த்தூது எனும் நூலாக எழுதி வெளியிட்டார்.

பிற மொழியினர் தமிழ்ப் பண்பாட்டினை அறிந்து கொள்வதற்காக தமிழ் பண்பாடு என்னும் ஆய்விதழை 1952 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியிடத் தொடங்கினார். இவ்விதழ்மூலம் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு பற்றி அறிந்த மேலைத்தேய ஆய்வாளர் பலர் தமிழாய்விலே ஈடுபடலாயினர். இத்தகைய ஆய்வு முயற்சிகள் பெருகிவரும் வேளையிலே தான் அடிகளார் உலகத்தமிழாராய்ச்சி மன்றம் ஒன்றின் தேவையை உணர்ந்தார்.

கீழைத்தேய ஆய்வுமாநாடு 1964 ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்றது. இம்மாநாட்டிலே பங்குபற்றிய பேராசிரியர் ஷான் பிலியோசா, கலாநிதி றொன் ஆஷர், பேராசிரியர் தொமஸ் பறோ, பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் தெ.போ. மீனாட்சி சுந்தரன், பண்டிதர் க.பொ. இரத்தினம் ஆகியோரை ஒன்றுகூட்டி அம்மாநாடு முடிந்தவுடன் உலகத் தமிழாராய்ச்சி மன்றம் அமைப்பதற்குரிய ஆலோசனைகளை அடிகளார் நடத்தி மன்றம் அமைக்கப்பட்டது.

முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டினை மலேசிய அரசின் துணையுடன் கோலாலம்பூரில் 1966 ஆம் ஆண்டு நடத்தினார். தொடர்ந்து எட்டு தமிழாராய்ச்சி மாநாடுகள் நடந்து முடிந்துவிட்டன. பெருந்தொகையான தமிழியல் ஆய்வுகள் வெளியாகியுள்ளன. உலகின் பல பல்கலைக்கழகங்களிலே தமிழ்த்துறைகள் ஆரம்பிக்கப்பட்டன. தனிநாயகம் அடிகளாரின் தொலைநோக்குடைய தமிழ்ப் பணியின் பயன்களை நாம் இப்பொழுது கண்கூடாகக் காண்கின்றோம்.

**யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், யாழ்.மறைமாவட்டத்துடன் இணைந்து நடத்தும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழுவின் தொடக்க நிகழ்வு இன்று புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெறுகிறது. இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

தமிழ் ஆய்வு வளர்ச்சியிலே தவத்திரு தனிநாயக அடிகளாரின் பங்களிப்பு கணிசமாக அமைந்துள்ளது. மறையியலிலே தனது ஆய்வினைத் தொடங்கிய அடிகளார் தமிழியலிலும் கல்வியியலிலும் ஆய்வுகள் பல மேற்கொண்டுள்ளார். தமிழியலில் அவர் மேற்கொண்ட ஆய்வுகள் பன்முகப்பட்டன. ஐரோப்பியக்கலை, மறையியல் வலியுறுத்தும் மனிதாயம் ஆகியவற்றிலே பயிற்சிபெற்ற அடிகளார் தமிழியல் ஆய்விலே ஈடுபட்டபோது எமது பண்டைத் தமிழிலக்கியங்கள் பிரதிபலிக்கும் தமிழ்நாட்டின் இயற்கை அழகு, தமிழரின் அழகுணர்வு, அவர்களுடைய மனிதாய ஆளுமை இயல்புகள் ஆகியவற்றிலே ஈடுபாடு கொண்டது ஆச்சரியமில்லை.

அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தமிழ் முதுமாணி பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு (Master of Letters) எனும் பட்டத்திற்காக சங்க இலக்கியத்தில் இயற்கை எனும் விடயம் பற்றி ஆய்வு மேற்கொண்டார். பண்டைத்தமிழ் இலக்கியங்களிலே மனிதாயப் பண்புகளில் ஈடுபாடு கொண்ட அடிகளார் அவ்விலக்கியங்கள் சித்திரிக்கும் இயற்கையினை மக்களின் ஆளுமை இயல்புகளுடன் தொடர்புபடுத்தியே நோக்கினார். சங்கப்பாடல்கள் என்றவுடன் போரையும் காதலையும் குறிப்பிடும் பாடல்களிலேயே எண்ணுகின்ற வழக்கம் இருந்தது.

அடிகளார் இப்போக்கிலிருந்து மாறுபட்டவர். பழந்தமிழ் மக்களின் ஒன்றே உலகம் எனும் பரந்தநோக்கு, கண்ணோட்டம், அவர்களுடைய நிறை, நீதி, கல்விக்கொள்கை ஆகியவற்றைப் பறைசாற்றும் பாடல்களிலே அவர் ஈடுபட்டார்.

சங்கப்பாடல்களில் ஈடுபட்டதுபோல திருக்குறளிலும் அவர் மனம் ஆழமாகச் சென்றது. வள்ளுவனுடைய குரல் கூறும் நல்லவழிகளையும் அவருடைய கத்தோலிக்க சமயம் காட்டும் நல்லவழிகளையும் ஒப்பிட்டு ஆராயக் கூடிய வாய்ப்பு அவருக்கு இருந்தது. இவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்களைத் துருவி ஆராய்ந்த அடிகளார் அவ்விலக்கியங்களின் அடிப்படையாக அமைந்த கோட்பாடுகளை தன் கட்டுரைகளிலும் பேருரைகளிலும் எடுத்துக்காட்டினார். அமரர் ஆவதற்கு சற்றுமுன்பாக அடிகளார் தமிழர் பண்பாட்டின் கோட்பாடுகள் எனும் தலைப்பிலே தந்தை செல்வா நினைவுப் பேருரையை நிகழ்த்தினார். தமிழர் இலக்கியங்கள் புலப்படுத்தும் கண்ணோட்டம் எனும் இயல்பினை அவர் விரிவாக எடுத்து விளக்கினார். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் ஈடுபட்டது போல அடிகளார் நவீன தமிழ் இலக்கியங்களிலும் ஈடுபட்டார். நவீன தமிழ் இலக்கிய ஆய்வுக்கும் அடிகளாருக்கும் உள்ளதொடர்பினை (**Urbanism in Dr.Varatharajans's Novels**) எனும் அவருடைய கட்டுரை நன்கு எடுத்துக்காட்டுவதாய் உள்ளது.

பல ஆண்டுகளாக உலகின் பல்வேறு பகுதிகளுக்கு தமிழ்த்தூது மேற்கொண்ட அடிகளார் தான் சென்ற இடங்களிலே வாழும் தமிழர்கள் பற்றிய தகவல்களை சேர்க்கத் தவறவில்லை. அவர்களுடைய வாழ்நிலை பிரச்சினை பற்றியெல்லாம் தகவல்கள் திரட்டுவதில் ஈடுபட்டார். அத்துடன் தமிழ்மொழி வரலாற்றுக்குத் தேவையான தகவல்களையும் திரட்டினார். பிற நாடுகளிலே வாழும் தமிழர்கள் பற்றிய தமது ஆய்வு முடிவுகளை அடிகளார் 1970 இல் பரிஸ் நகரிலே நடைபெற்ற மூன்றாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிலே (The Study of Contemporary Tamil Groups- A survey) எனும் கட்டுரையாக சமர்ப்பித்தார்.

அடிகளார் தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாடு ஆகியவற்றிலே ஈடுபட்டதுபோல கல்வித்துறையிலும் பெருமளவு ஈடுபாடு கொண்டார். குருத்துவப் பட்டம் பெற்று உயர்தரப் பாடசாலை ஆசிரியராகத் தொடங்கிய அடிகளார் 1952 இல் இலங்கைப் பல்கலைக்கழக கல்வித்துறை விரிவுரையாளராக கடமையேற்றார். தமிழர் கல்வி முறைபற்றி ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட அவர் லண்டன் பல்கலைக்கழகத்திலே பண்டைய ஐரோப்பிய இந்தியக்கல்வி முறைகளை தமிழ்க்கல்வி முறைக்கு விசேட தொடர்பு காட்டி ஒப்பிட்டு ஆராய்ந்து 1957 இல் கலாநிதிப்பட்டம் பெற்றார்.

நன்றாகத் தமிழ்செய்வோம் என்ற தொனிப்பொருளுடன் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், யாழ்.மறை மாவட்டத்துடன் இணைந்து இவ்வாண்டில் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னெடுப்பதில் மகிழ்ச்சி கொள்கின்றது.

**அ.சண்முகதாஸ்**
வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்.பல்கலைக்கழகம்



கலாபூஷணம் பொன். மகாதேவாவின் பாராட்டு விழா அண்மையில் பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய பர்வதவர்த்தனி மண்டபத்தின் அமரர் கலாபூசஷணம் இரா. பஞ்சலிங்கம் அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், கலாபூஷணம் பொன். மகாதேவாவினை கௌரவித்து வாழ்த்துமடல் வழங்குவதனைப் படத்தில் காணலாம்.

# மா.கொ.நிலையத்தின் ஏற்பாட்டில் வடக்குக் கிழக்கில் கட்டுரைப்போட்டி

(மல்லாவி)

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் க.பொ.த.சாதாரண தரம், க.பொ.த.உயர்தரம் ஆகிய தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களிடையே மொழி உரிமையும் மனிதநேயமும் என்ற கருத்திலான கட்டுரைப்போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இக்கட்டுரைப் போட்டியில் பங்குகொள்கின்ற மாணவர்கள் ஏ4 வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் 750 சொற்களுக்கு குறையாமலும் 1000 சொற்களுக்கு கூடாமலும் கட்டுரை எழுதப்படல் வேண்டும்.

இதில் இலங்கையின் இனப் பிரச்சினைகளும் மொழி உரிமைகளும், மொழி உரிமைகள் மனித உரிமைகளே, மொழி உரிமைகளும் இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வும், கலாசார பன்மைத்துவத்தின் அடிப்படையாக மொழி உரிமைகள், மொழி உரிமைகளை மதிப்போம் ஆகிய தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து கட்டுரை எழுதப்பட வேண்டும்.

மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றிபெற்ற ஆக்கங்கள் 5 இற்கு பெறுமதியான பரிசில்களாக பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

கட்டுரைகள் யாவும் பொறுப்பதிகாரி, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இலக்கம் 105, 5 ஆவது ஒழுங்கை , கொழும்பு 3 என்ற முகவரிக்கு எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்

மேலதிக தகவல்களை 0112370801, 0112370803 ஆகிய தொலைபேசி இலக்கங்களோடு தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

(அ-3-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பங்களை தேடி இணைக்கும் வேலைத்திட்டம் வடக்கில் ஆரம்பம்

யுத்தத்தின்போது தனது உறவுகளைப் பிரிந்து சிறுவர்களையும் குடும்பங்களையும் தேடி ஒன்றிணைக்கும் இரண்டாவது கட்ட வேலைத்திட்டம் வடக்கில் நேற்று முன்தினம் தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக உறவுகளை பிரிந்து நிற்கும் சிறுவர்களையும் குடும்பங்களையும் தேடிக் கண்டுபிடித்து ஒன்றிணைப்பதற்கான பிரதான நிலையம் கிளிநொச்சி நகரில் இந்த வாரம் உடனடியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்திற்கென ஜப்பான் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள 60 மில்லியன் ரூபா நிதியை யுனிசெப் நிறுவனம் வடமாகாண சபைக்கு வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வடமாகாண சபையின் கீழ் இயங்கும் நன்னடத்தைகள், சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஊடாக மேற்படி நிலையம் கண்காணிக்கப்படவுள்ளது.

பிரிந்து தவிக்கும் சிறார்களையும் அவர்களது குடும்பங்களையும் தேடிக் கண்டுபிடித்து ஒன்றிணைக்கும் வேலைத்திட்டத்தை துரிதப்படுத்தும் பொருட்டு மேற்படி நடவடிக்கைகளில் தேர்ச்சிபெற்ற ஓய்வுபெற்ற பிரிகேடியர் கல்கமுவ மேற்படி திட்டத்தின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் வடமாகாண ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் இதுவரை காலம் யுத்தத்தின் போது பிரிந்து தவித்த சுமார் 600 சிறார்கள் அவர்களது குடும்பங்களுடன் சேர்த்து வைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் வவுனியாவில் இயங்கி வந்த மேற்படி நிலையம் மூடப்பட்டு வந்த நிலையிலேயே ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## சாரணர் யம்போறி நிகழ்வில் கிளி.மாவட்ட சாரணர்கள்

(சாவகச்சேரி)

கண்டியில் நடைபெறும் சாரணர் யம்போறி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 4 சாரணர் மாணவர்களும் 4 சாரணர் மாணவத் தலைவர்களும் சென்றுள்ளனர்.

இவர்களை கிளிநொச்சி மாவட்ட சாரணர் ஆணையாளர் சுப்பிரமணியம் அழைத்துச் சென்றுள்ளார்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கண்டி தர்மராசா வித்தியாலயத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் இருந்து 36 சாரணர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். கிளிநொச்சி மாவட்ட சாரணர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகளை கிளிநொச்சி பாதுகாப்பு படைப்பிரிவினர் வழங்கியுள்ளதாகவும் சாரணர்கள் கல்விச் சுற்றுலாவையும் கண்டியில் மேற்கொள்ளவுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட சாரணர் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ-3-29)

## நோயாளர்களை பார்வையிட அனுமதிப்பதில் கட்டுப்பாடுகள்

### பாதிக்கப்பட்டவர்கள் விசனம்

யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர விபத்துச் சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்படும் நோயாளர்களை பார்வையிடும் உறவினர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டு காணப்படுவதனால் உறவினர்கள் பெரிதும் துன்பங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். போதனாவின் விபத்துச் சிகிச்சைப் பிரிவாக 24 ஆம் விடுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்விடுதியில் ஆண் மற்றும் பெண் நோயாளர்களிற்கு என பொதுவான அதிதீவிர சிகிச்சை பிரிவு இயங்கி வருகின்றது. இப் பிரிவில் உடல் நிலை மோசமடைந்த நோயாளர்களுக்கே சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களினை பார்வையிடுவதற்கு நோயாளர்களின் நலன் கருதி பல கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றில் ஒன்றுதான் இரு நோயாளியினை மூன்று பேர் மட்டுமே பார்வையிடுவது என்பதோடு குறிப்பிட்ட நேரத்திற்குள் பார்வையிடல் வேண்டும் என்பதாகும்.

இக்கட்டுப்பாடு நோயாளர்களின் உடல் நலன் கருதியே உள்ளது எனவும் அதிகளவானோரை பார்வையிட அனுமதிப்பதால் நோயாளர்கள் வீண் சிரமத்தினை எதிர்கொள்ள நேரிடும் என வைத்தியசாலைத் தரப்பு தெரிவிக்கின்றது.

எனினும் இக்கட்டுப்பாடானது தூர இடங்களில் இருந்து நோய்வாய்ப்பட்டுள்ள தமது உறவினர்களை பார்வையிட வருகின்ற உறவினர்களுக்கு பெரிதும் இடையூறாக காணப்படுவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு கண்ணாடி யன்னல் அல்லது பெட்டிக் கூடாக பார்க்கக்கூடியதான மாற்று ஏற்பாடுகள் அல்லது பார்வையிடும் பார்வையாளர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

இக் கட்டுப்பாட்டினால் பார்வையாளர்களிற்கும் பாதுகாப்பு ஊழியர்களிற்கும் இடையில் தேவையற்ற முரண்பாடுகள் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-4)

## சேதமடைந்த தபால் நிலையத்தை புனரமைத்துத்தர கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பெரிய தம்பனைக் கிராமத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்ட தபால் நிலையம் கடும் காற்றினால் சேதமடைந்து பல மாதங்களாகியும் திருத்தப்படாத நிலையில் காணப்படுவதாக அக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

யுத்தம் காரணமாக பெரிய தம்பனைக் கிராமத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து மீண்டும் 2010 ஆம் ஆண்டு 7 ஆம் மாதம் மீள்குடியேறியபோது பெரியதம்பனை உட்பட அதனை அண்டிய பகுதி மக்களின் தேவை கருதி சகல வசதிகளுடனான தபால் நிலையம் அமைக்கப்பட்டது.

பல இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட இத்தபால் நிலையத்தினை தரமற்ற முறையில் அமைத்ததன் காரணத்தால் கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏற்பட்ட கடும் காற்றுடன் சேர்ந்த மழையின் போது கட்டடத்தின் கூரை முற்றாக சேதமடைந்து அங்கிருந்த பொருட்களும் நீரில் மூழ்கின.

இதனையடுத்து தபால் நிலையத்தினை அருகில் உள்ள தனியார் ஒருவரது கடையில் இயங்க வைப்பதற்கு அஞ்சல் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் சேதமடைந்த கட்டடம் திருத்தப்படாது அதே நிலையிலேயே காணப்படுகின்றது.

இதன் காரணமாக அங்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் தொடர்ச்சியாக மழை, வெயிலில் கிடப்பதால் அவை மேலும் பழுதடைந்துள்ளதுடன் கறையான் அரிக்கும் நிலையில் காணப்படுகின்றது என தமது ஆதங்கத்தை தெரிவித்தனர்.

இதேவேளை, அத்தபால் நிலையத்தினை திருத்தம் செய்து சகல வசதிகளுடன் மக்களுக்கு அஞ்சல் திணைக்களம் கையளிக்குமானால் மீள்குடியேற்றப்பட்ட இப்பகுதிக்கான தொலைத்தொடர்பு வசதிகளை மேம்படுத்திக் கொள்ள முடியுமெனவும் தெரிவித்தனர். (அ-2-266)

## தனியார் பேருந்துகளுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படமாட்டாது

### நிதி அமைச்சு தெரிவித்தது

தனியார் பேருந்து கட்டண உயர்விற்குப் பதிலாக மானியம் வழங்க வேண்டும் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் முன் வைத்திருந்த கோரிக்கையை நிதி அமைச்சு நிராகரித்துள்ளது.

பேருந்து கட்டணத்தை அதிகரிக்கவோ மானியம் வழங்கவோ தற்போதைய நிலையில் எதுவித தேவையும் எழாதது குறித்து பேருந்து உரிமையாளர் சங்கங்களுக்கு நியாயபூர்வமாக விளக்கப்படவுள்ளதாகவும் அதனை பேருந்து சங்கங்கள் ஏற்றுக்கொண்டதாகவும் தனியார் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் விக்டர் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பேருந்து சங்கங்களின் கோரிக்கை தொடர்பில் ஆராயும் கூட்டம் நேற்று முன்தினம் நிதி அமை ச்சில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

பஸ் சங்கங்களின் கோரிக்கையை செவிமடுத்ததோடு அவை குறித்து நிதி அமைச்சின் செயலாளருக்கு முன்வைப்பதாக இதன் போது உறுதியளிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தை சுமுகமாக இடம்பெற்றதோடு கட்டணம் அதிகரிக்க முடியாததன் நியாயபூர்வ காரணங்களை அவர்களுக்கு விளக்கியதாக அமைச்சின் செயலாளர் விக்டர் சமரசிங்க கூறினார்.

தற்போதைய நிலையில் நிவாரணம் வழங்க முடியாது எனவும் எதிர்காலத்தில் எரிபொருள் உயர்வோ வேறு போக்குவரத்து செலவுகள் அதிகரிப்போ ஏற்பட்டால் கட்டண உயர்வு குறித்து ஆராய முடியும் எனவும் விளக்கியதாக அவர் குறிப்பிட்டார். (அ-2)


## கல்வி முதுமாணி பட்டநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனத்தால் கல்வி முதுமாணிப் பட்டநெறியை பயில்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக நிறுவன கல்விமாணி பட்டநெறி சிரேஷ்ட விரிவுரையாளரும் என்.ஐ.ஈ. அலுவலக இணைப்பாளருமான எஸ்.ஆர். சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இப் பயிற்சிநெறிக்கு கல்விமாணிப் பட்டதாரிகள் விண்ணப்பிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். மேற்படி விண்ணப்பங்கள் இன்று இறுதியாக ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் விண்ணப்பப்படிவ மாதிரியை நிறுவன இணையத்தளமான www.NIE.lk பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தேசிய கல்வி நிறுவக கல்விமாணி நெறியை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பிராந்திய நிலையத்தில் பயின்ற 2007/2009 ஆம் கல்வி ஆண்டு ஆசிரிய மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளையும் நிறுவன இணையத்தள முகவரியில் பார்வையிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)


யாழ்.எயிட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்.பூம்புகார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கான உதவிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் விருந்தினர் மங்கல விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதையும் அவுஸ்திரேலியா வாழ்.புலம்பெயர் தமிழரான மனோகரன் மாணவர் ஒருவருக்கு உதவிப் பொருட்களை வழங்கி வைப்பதையும் உதவிப் பொருட்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளைஞர் சேவை கூட்டுறவு சங்கத்தில் 1, 902 பேர் அங்கத்துவம் பெற்றுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு சங்கத்தில் (நிஸ்கோ) ஆயிரத்து 902 பேர் இதுவரை அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டுள்ளனர் என பொது முகாமையாளர் வி.பி. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஓர் அங்கமாக செயற்படுகின்ற நிஸ்கோவின் செயற்பாடுகள் தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று நேற்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தில் இளைஞர், யுவதிகள் இணைந்து கொள்வதன்மூலம் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கடந்த 2010 ஆம் ஆண்டு 14 பேரும் 2011 ஆம் ஆண்டு 14 பேரும் கடந்த வருடம் 51 பேரும் தலா இரண்டரை இலட்சம் ரூபா சுயதொழில் கடனாக பெற்றுள்ளனர். இதனை விட கடந்த 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 305 பேருக்கு மேல் தலா 25 ஆயிரம் ரூபாவை கல்வி ஊக்குவிப்பு கடனாக பெற்றுள்ளனர்.

இதனைவிட எமது நிஸ்கோவின் ஊடாக எதிர்வரும் மாதங்களில் இளைஞர்களுக்கு குறைந்த கட்டணத்தில் பல பயிற்சிநெறிகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# மீள்குடியமர வேண்டியவர்கள் குறித்து சரியான தகவலில்லை

## யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இன்னும் எத்தனை பேர் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளனர் என்பது தொடர்பில் சரியான தகவல்கள் பதிவு செய்யப்படவில்லை என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் பதிவு செய்யப்பட்டவர்களை விட மிகவும் குறைந்தளவிலானோர்களே மீள்குடியேற்றத்தின் போது வருகை தந்திருந்தனர்.

மீள்குடியேற்றத்திற்கு தயாராகவுள்ளவர்களைத்தான் மீள்குடியேற்ற முடியும். அத்தோடு இன்னும் எத்தனை பேர் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளனர் என்பதை உறுதிபட தெரிவிப்பதற்கான பதிவுகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.

மீள்குடியேற தயாராக இல்லாதவர்களை எவ்வாறு மீள்குடியேற்ற முடியும். இருப்பினும் மீள்குடியேற்றப்பட வேண்டியவர்களின் தகவல்கள் திரட்டப்படவுள்ளன.

பலர் யுத்த காலத்தில் வெளி மாவட்டங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்று தங்கி வாழ்கின்றனர். அவர்களை அழைத்து வந்து மீள்குடியேற வைக்க முடியாது. மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட இடங்களிலும் மீள்குடியேற அனுமதிக்கப்படவுள்ள இடங்களிலும் அவர்களுக்கு சொந்தமான காணிகள் இருந்தால் அவர்களின் மீள்குடியேற்றத்தை தடுப்பதற்கு யாருக்கும் அதிகாரமில்லை எனவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# பொது நலவாய மாநாட்டில் சிங்கப்பூரும் பங்கேற்கும்

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்க விருப்பம் கொண்டுள்ளதாக சிங்கப்பூர் அறிவித்துள்ளது.

சிங்கப்பூரின் வெளியுறவுத்துறை அமைச்சர் கே.சண்முகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளதாக இலங்கையின் அரச சார்பு பத்திரிகை தெரிவித்துள்ளது.

கே.சண்முகத்தை இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கடந்த வெள்ளிக்கிழமையன்று சந்தித்தார்.

இதன்போது இலங்கை பெற்றுள்ள சமாதானம் மற்றும் உறுதிப்பாடு அந்த நாட்டுக்கு மாத்திரமல்ல பிராந்தியத்தின் அனைத்து நாடுகளுக்கும் நன்மை பயக்கக்கூடியது என்று,அவர் குறிப்பிட்டார். (அ-2)

# ஆடம்பர செலவுகளை குறைத்து விவசாயிகளுக்கு உதவுங்கள்

## ஆனந்தன் எம்.பி. கோரிக்கை

ஆடம்பர செலவுகளை குறைத்து மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு குறைந்தது 25 ஆயிரம் ரூபா இழப்பீட்டை ஓரிரு வாரங்களுக்குள் அவசரமாக வழங்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு,

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக பெய்த கடும் மழையினால் நெற்செய்கை, உழுந்து உட்பட சிறுதானிய செய்கைகள் அனைத்தும் முற்றாக அழிவடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் தற்கொலை செய்யும் நிலைக்கு சென்றுள்ளதாகவும் அவர்களால் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

25 ஆயிரம் ரூபா இழப்பீட்டுத் தொகை உடனடியாக வழங்கப்படுவதுடன் விவசாயிகள் வங்கிகளில் பெற்ற கடன்கள் அனைத்தையும் அரசாங்கம் இரத்துச் செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நெற்செய்கை, உழுந்து மற்றும் சிறுதானிய செய்கைகளில் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த மக்களே கூடுதலாக ஈடுபட்டனர்.

இதற்காக வங்கிகள், உறவினர்கள், நண்பர்களிடம் அவர்கள் பெரும் தொகை கடன்களைப் பெற்றிருந்தனர். ஆனால், தொடர்ச்சியாக பெய்த கடும் மழையினால் அவர்கள் ஏமாற்றம் அடைந்து தற்போது வாழ வழியின்றியும் பெற்ற கடன்களை மீள கொடுக்க முடியாமலும் தவிக்கின்றனர். பாதிக்கப்பட்ட விவசாயிகள் பலர் தற்கொலை செய்ய முயற்சி எடுத்ததாக தனக்கு தகவல் கிடைத்துள்ளது என்று சிவசக்தி ஆனந்தன் கூறியுள்ளார்.

ஆகவே, யுத்தத்தினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட தமிழ் விவசாயிகளுக்கு அரசாங்கம் உடனடியாக முன்வந்து ஆடம்பர செலவுகளை குறைத்து ஒரு ஏக்கருக்கு ஆகக்குறைந்தது 25 ஆயிரம் ரூபாவை இழப்பீடாக அடுத்த ஓரிரு வாரங்களுக்குள் வழங்க வேண்டும் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார். (அ-2-250-266)

# செம்மலை கிராமத்தில் கசிப்பு உற்பத்திகள் தாராளம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுரைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள செம்மலை கிராமத்தில் கசிப்பு, கள்ளச்சாராய உற்பத்தி அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் மேற்குறித்த கிராமத்தில் குழுக்களுக்கிடையே, குடும்பங்களுக்கிடையே கருத்து முரண்பாடுகளும் சண்டைகளும் ஏற்படுகின்றன.

மேலும் சில அசம்பாவிதங்களும் இடம்பெற வாய்ப்பளிக்கின்றது.

இதுதெடர்பாக பொலிஸாருக்கும் மதுவரித் திணைக்களத்தினருக்கும் மக்கள் தெரிவித்து தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டபோதும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் இச்செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுகின்றது. எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(அ-3-267)



ஹற்றன் நஷனல் வங்கி அச்சுவேலிக் கிளையில் சிங்கிதி சிறுவர் கணக்கில் சேமித்து பரிசினை அண்மையில் வென்ற தீபன் கஸ்வின் முகாமையாளரிடமிருந்து தனது பரிசினைப் பெற்றுக் கொள்வதையும் படத்தில் காணலாம்.

# செய்தியாளர் மீதான தாக்குதல் தொடர்பில் சந்தேக நபர் கைது

சண்டேலீடர் செய்தியாளர் ஃபராஸ் சௌக்க மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பில் இரண்டு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் கல்கிஸ்ஸ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் இதுவரை 30 பேருக்கும் அதிகமானோரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

குறித்த செய்தியாளருக்கு முன்னர் பல அச்சுறுத்தல்கள் இருந்த போதும் அவர் பொலிஸில் முறைப்பாடு எதனையும் செய்யவில்லை என்று கல்கிஸ்ஸ பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# பரிந்துரைகளை அமுல்படுத்துங்கள்

## எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுக்கும்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கவுள்ளன.

இது தொடர்பான விசேட ஆவணமொன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூடி இது குறித்து தீர்மானித்துள்ளனர்.

சர்வதேச ரீதியான அழுத்தங்களை எதிர்நோக்க கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முறையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன. (அ-2)

# அல்கொய்தா தீவிரவாத சந்தேக நபரை அமெரிக்காவிடம் ஒப்படைத்தது இலங்கை

அல்கொய்தா தீவிரவாத சந்தேக நபரை கைது செய்து இலங்கை அரசாங்கம் அமெரிக்காவிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் சீ.ஐ.ஏ. உளவுப் பிரிவினர் இலங்கையின் வான் பரப்பைப் பயன்படுத்திக் கொண்டதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்நிலையில் இலங்கையில் தலைமறைவாகியிருந்த அல்கொய்தா தீவிரவாத இயக்க சந்தேக நபர் ஒருவரை கைது செய்து அமெரிக்காவின் சீ.ஐ.ஏ. உளவுப் பிரிவினரிடம் இலங்கை அதிகாரிகள் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவின் கோரிக்கைக்கு அமைய இவ்வாறு அல்கொய்தா சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எவ்வாறெனினும் குறித்த காலத்தில் நாட்டின் படைச் சேனாதிபதியாக கடமையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு இந்த இரகசிய ஏற்பாடு குறித்து ரணிலின் அரசாங்கம் அறிவிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்காவின் தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு இலங்கை பல வழிகளில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும் அதைப் பின்பற்றிச் செல்.

–சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## டாக்டர் சிவசங்கரின் விடுதலைக்காக குரல் கொடுங்கள்

மருத்துவர் இ.சிவசங்கர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பலரும் கவலை கொண்டுள்ளனர்.

மனித உரிமைகள் தொடர்பில் டாக்டர் சிவ சங்கர் அதீத கவனம் செலுத்தினார்.

சாதாரண மக்கள் நசுக்கப்படும் போதெல்லாம் அவர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும் என்பது அவரின் கொள்கையாக இருந்தது.

அநீதி நடப்பதாக ஒரு மருத்துவர் அறியும் போது அதற்காகக் குரல் கொடுப்பது நியாயமானது மட்டுமல்ல, மனித உயிர்களைப் பாதுகாக்கின்ற ஒரு உத்தம மருத்துவரின் தார்மீகக் கடமையும்கூட. அதைத்தான் டாக்டர் சிவசங்கரும் செய்திருந்தார்.

எனினும் மஞ்சள்காமாலைக் கண்களுக்கு எல்லாமும் பயங்கரவாதமாகக் காட்சி கொடுத்து விடுகின்றது.

மருத்துவர் ஒருவர் நியாயம் கேட்கிறார் எனில் அவருக்குச் சரியான விளக்கத்தைக் கொடுப்பது தான் ஜனநாயகத்தின் பண்பு.

ஆனாலும் டாக்டர் சிவசங்கரின் விடயத்தில் படைத்தரப்பு நடந்துகொண்ட முறை மிகவும் அபத்தமானது.

ஒருவர் வெளிப்படையாக –நேரடியாக நியாயம் கேட்கிறார் எனில், அவர் தொடர்பில் பெருமைப் பட வேண்டும்.

உள்ளிருந்து வேரறுக்கின்ற இந்த உலகில் நேர்மையும் வெளிப்படைத்தன்மையும் நியாயமான போக்கும் ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்ற சிந்தனையுமே அவசியமானவை.

இவையே நாட்டின் ஒற்றுமைக்கும் இறையாண்மைக்கும் மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கும் அவசியமானவை.

ஆனாலும் உண்மைகள், கடும் உறைப்பும் கடுப்புமாகிவிட்ட இந்த நாட்டில் டாக்டர் சிவசங்கர் என்ற ஒரு நல்ல ஆத்மா சிறையில் வதைபடுகின்றது–வதைக்கப்படுகின்றது.

இத்தகைய வேதனை தரும் சம்பவங்கள் தொடர்பில் பேசாதிருப்பது பெரும் பிழை.

ஆகையால்; மருத்துவர் சங்கங்கள், பொது அமைப்புகள், அரசியல்வாதிகள், கல்வியாளர்கள், அரச உயரதிகாரிகள் அனைவரும் இணைந்து டாக்டர் சிவசங்கரின் விடுதலைக்காகக் குரல் கொடுக்க வேண்டும்.

டாக்டர் சிவசங்கரின் விடுதலை தொடர்பில் யாழ்ப்பாண மருத்துவர் சங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?அந்த நடவடிக்கைக்கு கிடைத்த பதில் என்ன?

மேற்கொண்டு, டாக்டர் சிவசங்கரின் விடுதலைக்காக யாழ்ப்பாணத்து மருத்துவப் பெருமக்கள் முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் என்ன என்பதை எங்களைப் போன்ற சமானியர்கள் அறிய நினைப்பதில் எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை.

எனவே மருத்துவர் சங்கம் அவற்றை தெரியப்படுத்துவதோடு மருத்துவர் சிவசங்கரின் விடுதலைக்காக அனைத்துத் தரப்பினரும் குரல் கொடுத்து அவரின் விடுதலையை விரைவுபடுத்த முன்வர வேண்டும்.

# யாழின் அபிவிருத்தி போதுமானதாக இல்லை

## அமெரிக்க காங்கிரஸினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் போதுமானதாக இல்லை என அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவித்ததாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் கூறினார்.

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களான பாபிலோ ராப், செல்வி லீஸா வில்லியம்ஸ் ஆகியோர் நேற்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு நிறைவு பெற்றதும் அரசாங்க அதிபர் பத்திரிகையாளர்களுக்கு மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்குயாழ்.குடாநாட்டின்அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக (2012–ம் ஆண்டு வரையான) விளக்கமளித்திருந்தேன்.

வீதி அபிவிருத்தி, மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் உட்கட்டமைப்பு வசதிகள், வீட்டுத் திட்ட உதவிகள், விவசாயத் திட்டங்கள், கடற்றொழில் திட்டங்கள் என்பன அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் தமக்கு திருப்தி எனத் தெரிவித்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏனைய மாவட்டங்களை விட வடக்கிலுள்ள குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் தற்போதுதான் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வேறு மாவட்டங்களில் அவதானித்ததை விட இங்கு அபிவிருத்தித் திட்டங்கள் போதுமானதாக இல்லை எனவும் தெரிவித்ததோடு அதற்கு என்ன காரணம் எனவும் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அதற்கு இங்கு இடம்பெற்ற யுத்தம் காரணமாகவே அபிவிருத்திகள் அதிகளவில் இடம்பெறவில்லை எனப் பதிலளித்தேன் என்றார்.

இதேவேளை மீள்குடியேற்றம், இராணுவப் பிரசன்னம் தொடர்பில் கேள்வி கேட்கப்பட்டதா என அரச அதிபரிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோது அந்த விடயங்கள் தொடர்பில் எதுவும் கேட்கப்படவில்லை எனத் தெரிவித்தார். (செ–6)

# விமான நிலையத்திற்கு காணி சுவீகரிப்பா?

## தெரியாது என்கிறார் அரச அதிபர்

பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் விஸ்தரிப்புக்கு காணி சுவீகரிக்கப்படுவது தொடர்பில இதுவரை எந்தத் தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவரினால் பலாலி விமான நிலையத்தை விஸ்தரிப்பு செய்வதற்காகவும் காங்கேசன்துறை முகத்தை விஸ்தரிப்பு செய்வதற்காகவும் வலி வடக்கு மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படும்; அதற்கான நஷ்டஈடு வழங்கப்படும் என யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி கூறியிருந்தமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்ட போதேஅவர்மேற்கண்டவாறுதெரிவித்தார்.

வலி.வடக்கில் இராணுவத்தினர் காணி சுவீகரிப்பது தொடர்பில் இதுவரை எந்த விதமான அனுமதியும் கோரவில்லை எனவும் அது தொடர்பில் எந்தத் தகவலும் தனக்கு கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (செ–6)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைபிப1.30மணிக்குவித்தியாலயமைதானத்தில் வித்தியாலய முதல்வர் கே.தேவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.சிவநாதனும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபரான திருமதி. எஸ். முத்துலிங்கம், எஸ்பத்மநாதனும் கௌரவ விருந்தினராக தென்மராட்சி இளைஞர் கழகத் தலைவர் எஸ். ரி விமதாஸ் ஆகியோர் கலந்துசிறப்பிக்கவுள்ளனர்.(செ–2–37)

## பாரவூர்தி குடைசாய்ந்தது; இருவர் காயம்

(பூந்தோட்டம்)

பாரஊர்தி குடைசாய்ந்ததில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை வவுனியா பூஓயா பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

கொழும்பில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பொருட்களை ஏற்றி வந்த பாரஊர்தியேஅதிகாலை வீதியை விட்டு விலகி குடைசாய்ந்துள்ளது. இதன்போது பாரஊர்தியில் பயணித்த சாரதி உட்பட மேலும் ஒருவர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சுமார் 20 இலட்சம் பெறுமதி யான உணவு பொருட்கள் உட்பட பல்வேறு வகை பொருட்களை ஏற்றி வந்த போதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதுடன் பொருட்கள் அனைத்தும் நீரில் வீழ்ந்துள்ளன.

தகவல் கிடைக்கப்பெற்ற பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (அ-2-26)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் ரி.சண்முகசுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச அலுவலக பணிப்பாளர் எஸ். சிவானந்தராசா, கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலப் பிரிவு விரிவுரையாளர் க.ஸ்ரீகணேசன், யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர் ஜி.புவனலோஜினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ)

★ ★ ★ ★ ★ ★

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (செ -3-29)

★ ★ ★ ★ ★ ★

யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதன், சிறப்பு விருந்தினராக வண்ணார்பண்ணை ஜே/82 கிராம அலுவலர் ந.சபாரத்தினம், கௌரவ விருந்தினராக பொதுச் சுகாதார பரிசோதகர் ச.அனுசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (செ–5)

## புடைவைக்கடையில் திருட்டு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சந்தைக்கு அருகாமையில் உள்ள புடைவைக் கடையொன்றில்திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த 17 ஆம் திகதி நள்ளிரவு இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, ஓட்டைப் பிரித்து புடைவைக் கடையினுள் நுழைந்த திருடர்கள் 3இலட்சம் ரூபா பணம், 10 1/2 பவுண் நகை, 13 இலட்சம் ரூபா பெறுமதியான விலை உயர்ந்த புடைவைகள் என்பவற்றை திருடிச் சென்றுள்ளான்.

இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ–3–86)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்



### உள்ளத்தைக் காட்டும் கண்ணாடி

❁ உன்னுடைய மார்க்கத்தில் ஆழ்ந்த பற்றும் திட நம்பிக்கையும் உடையவனாய் இரு. ஆனால் மதவெறியின்றி பிற மதத்தின் மீது துவேசம் அற்றவனாயிரு.

❁ உன்மத்தவர்கள், குடிகாரர்கள், குழந்தைகள் இவர்கள் வாய்மூலமாகவும் சிற்சில வேளைகளில் தெய்வீக விடய ங்கள் வெளிவருவதுண்டு.

❁ பக்தியையும் பிரேமையையும் பற்றிய இரகசியங்களைத் தினந்தோறும் உன் ஆயுள் உள்ளளவும் கற்றுக்கொள். அது உனக்கு எப்போதும் பலனைத்தரும்.

❁ ஹரி என்றால் நமது இதயத்தைக் கவர்பவன் என்று பொருள்.

❁ ஈஸ்வர தியானத்தில் மிதமிஞ்சிப்போவதால் துன்பமடைவது இல்லை. வைரத்தினுடைய ஜோதி பிரகாசித்துக் குளிர்ச்சியைத் தருமே ஒழிய ஒருபோதும் சுட்டெரிக்காது.

❁ புண்ணியபாவத்தின் உயர்வு தாழ்வு என்பது மனத்தின் நிலையைப் பொறுத்து அமைவதாகும்.

❁ மானுட உடல் ஒரு தலையணை உறைபோன்றது. அதனுள் பஞ்சு போன்ற எதை வேண்டுமானாலும் போட்டு வைக்கலாம். ஆனால் பக்தன் ஒருவனுடைய உள்ளமோ ஈசனுடைய ஆலயம் ஆகிறது.

❁ கண்ணாடிப்பெட்டிக்குள் வைத்திருப்பவைகளை எல்லாம் கண்ணாடியின் மூலமாகப் பார்ப்பது போன்று ஒருவனுடைய கண்ணின் மூலம் அவன் உள்ளத்தில் இருப்பதை எல்லாம் காணலாம்.

❁ மனிதனுக்கு எட்டுவித பந்தங்கள் இருக்கின்றன. அதை வெட்கம், வெறுப்பு, அச்சம், ஜாதிச்செருக்கு, வம்சவழிச்செருக்கு, சீலம், துயரம், உள்ளத்தில் ஒளித்து வைத்தல் என்பனவாகும். குரு கடாட்சமின்றி இப்பந்தங்களினின்று சாதகன் ஒருவன் விடுதலை அடைவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாரஸ்யமாக நடைபெறுகிறது திரையுலக கிரிக்கெட் ஆட்டங்கள்



சென்னை திரையுலக அணியினருக்கு ஆதரவாக திரையுலக நட்சத்திரங்களான வரலக்ஷ்மி சரத்குமார், சுருதிஹாசன், அக்சரா ஹாசன், சோனியா அகர்வால், மதுசாளினி ஆகியோர் வீரர்களை உற்சாகப்படுத்துகின்றனர்.

இந்தியத் திரையுலகத்தினர் பங்குபற்றும் ரி-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி சுவாரஸ்யமாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகின்றது. இதில் தமிழ்நாடு, கேரளா, கர் நாடகம், ஹைதராபாத் என பல திரையுலக அணிகள் மோதுகின்றன.

சென்னை றெயினோஸ் திரையுலக அணியுடன் கர்நாடகா திரையுலக அணியினர் மோதிய ஆட்டம் அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியின்போது மழை குறுக்கிட்டதன் காரணமாக இரு அணியினருக்கும் தலா ஒவ்வொருபுள்ளிகள் வழங்கப்பட்டன.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை திரையுலக அணியினர் முதலில் களத் தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தனர்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கர்நாடக திரையுலக அணியினர் 6.1 ஓவரில் ஒரு விக்கெட்டினை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட்டதால் போட்டி கைவிடப்பட்டு புள்ளிகள் பகிர்நதளிக்கப்பட்டன. ஒவ்வொரு அணியினதும் திரையுலக நட்சத்திரங்கள் இப்போட்டியில் கலந்து கொண்டு தங்கள் அணி வீரர்களை உற்சாகப்படுத்தி வருகின்றனர். இந்த திரையுலக நட்சத்திரங்களைப் பார்ப்பதற்காகவே ஒரு தொகுதி ரசிகர் கூட்டம் ஒவ்வொரு போட்டியிலும் அலை மோதுகிறதாம்.

# ஹெட்றிக் போல்ட்; அதிர்ச்சியில் சச்சின்!

அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடருக்கான இந்திய வீரர்களுக்கான மூன்று நாள் பயிற்சிப் போட்டியில் உள்ளூர் வீரர்களின் பந்துவீச்சில் மூன்று முறை போல்டானார் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின். ஏற்கனவே, சமீபத்திய நியூசிலாந்து தொடரில் தொடர்ந்து 'போல்டாகி' விமர்சனத்தை சந்தித்தார்.

இன்னும் சில தினங்களில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக டெஸ்ட் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், அறிமுகம் இல்லாத வீரர்களின் பந்துவீச்சில் 'போல்டானது' சச்சினுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# உலக அணியில் இலங்கை உப தலைவி



சர்வதேசக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள 2013 ஆம் ஆண்டு உலகக்கிண்ண அணியில் இலங்கை அணியின் புதிய உப தலைவியும் அதிரடிச் சகல துறை வீராங்கனையுமான இஷானி கௌஷல்யா இடம்பெற்றுள்ளார். அறிவிக்கப்பட்டுள்ள 12 பேர் கொண்ட குழாமில் ஆசியாவைச் சேர்ந்த ஒரே வீராங்கனையாக இஷானி கௌஷல்யா இடம் பெற்றுள்ளார்.

உலகக் கிண்ண அணிக்காக 12 பேர் கொண்ட குழாம் தெரிவுசெய்யப்பட்ட தேர்வில் இலங்கை அணியின் தலைவியான ஷஷிகலா சிறிவர்தனவின் பெயரும் சிபார்சு செய்யபபட்ட போதிலும் ஏனைய வீராங்கனைகள் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டனர்.

இவ்வணியின் தலைவியாக நியூசிலாந்து அணியின தலைவியும், உலகக்கிண்ண மகளிர் தொடரின் நாயகியாகத் தெரிவாகிய சுசி பேட்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

**அணி விபரம் :**

சுசி பேட்ஸ் (நியூசிலாந்து), சார்லஜ் எட்வேர்ட்ஸ் (இங்கிலாந்து), ராசல் ஹெய்ன்ஸ (அவுஸ்திரேலியா), ஸ்ரஃபானி ரெய்லர் (மேறகிந்தியத் தீவுகள்), டீன்ட்ரா டொட்டின (மேற்கிந்தியத் தீவுகள்), இஷானி கௌஷல்யா (இலங்கை), ஜோடி ஃபீல்ட்ஸ் (அவுஸதிரேலியா), கத்தரின் பிரன்ற் (இங்கிலாந்து), ஹொலி கொல்வின் (இங்கிலாந்து), அனியா ஷ்ரப்சோல் (இங்கிலாந்து), மேகன் ஸ்கட் (அவுஸ்திரேலியா).

# தென்னாபிரிக்காவுக்கு ரூ6.5 கோடி பரிசுத்தொகை

பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்றதன்மூலம் டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள அணிக்கு வழங்கப்படும் ரூ.6.5 கோடி பரிசுத் தொகையை பெறும் தகுதியினை உறுதி செய்துள்ளது தென்னாபிரிக்கா.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதலாம் திகதி ஐசிசி டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி தரப்படுத்தலில் முன்னிலையில் இருக்கும் அணிகளுக்கு பரிசுத் தொகை வழங்கப்படும். அதன்படி கடந்த ஆண்டு வரை முதலிடத்தில் இருக்கும் அணிக்கு ரூ.2.5 கோடி வழங்கப்பட்டு வந்த நிலையில், இந்தாண்டு முதல் பரிசுத் தொகை ரூ.6.5 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை சமநிலை செய்தாலே முதலிடத்தைத் தக்கவைத்துக்கொள்ள முடியும் என்ற நிலையில், முதல் இரு போட்டிகளையும் வென்று தொடரைக் கைப்பற்றியுள்ளது தென்னாபிரிக்கா.

இதனால் பாகிஸ்தானுக்கு எதிரான கடைசிப் போட்டியில் தென்னாபிரிக்கா தோற்றாலும் 125 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கும். அடுத்து நடைபெறவுள்ள இந்தியா-அவுஸ்திரேலியா, இங்கிலாந்து-நியூஸிலாந்து டெஸ்ட் தொடர்களில் ஓர் அணி அனைத்து டெஸ்ட் போட்டிகளிலும் வென்றாலும் கூட முதலிடத்தைப் பிடிக்க முடியாது.

## காதலர் தினத்தில் .....

# ஏன் இந்தக் கொலை வெறி?

## விசாரணைகளில் துலங்குகிறது மர்மம்

**பிஸ்டோரியஸின் காதலிக்கு முன்னாள் காதலனிடம் இருந்து நள்ளிரவு வந்த எஸ்.எம்.எஸ் ஸ்டீன் கேம்ப் இன் உயிரைக் குடித்தது**



தென்னாபிரிக்க தடகள வீரர் பிஸ்டோரியஸ் தனது காதலி ரீவா ஸ்டீன்கேம்ப்பை சுட்டுக் கொன்றுள்ள நிலையில் தினமும் புதிய தகவல்கள் வெளிவருகின்றன. திருடன் என நினைத்து தவறுதலாக காதலியை சுட்டதாக முதலில் செய்தி வெளியானது.

பின்னர் பிஸ்டோரியஸ் வீட்டில் இரத்தக் கறை படிந்த கிரிக்கெட் துடுப்பு கண்டு பிடிக்கப்பட்டது. இந்த துடுப்பால் மண்டை ஓடு பலமாக தாக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் ரீவா ஸ்டீன்கேம்ப் விழுந்து கிடந்த குளியலறைக் கதவு உடைக்கப்பட்டிருந்தது என, பிஸ்டோரியசுக்கு எதிராக ஆதாரங்கள் வலுவாகி வருகின்றன. இப்போது, தடை செய்யப்பட்ட போதைப் பொருளான 'ஸ்டிராய்டு' இவரது வீட்டில் இருந்து எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சம்பவத்துக்கு முன் அதாவது, அதிகாலை 3 மணி அளவில் பிஸ்டோரியஸ் அளவுக்கு அதிகமாக மது குடித்து இருந்தாக தெரியவந்துள்ளது. இதனால், போதையில் இருந்த பிஸ்டோரியஸ், ஆத்திரத்தில் கொலை செய்தாரா என்பது குறித்து பொலிசார் இப்போது வசாரணை செய்து வருகின்றனர். இதனால், பிஸ்டோரியசின் இரத்த மாதிரி சோதனைககு அனுப்பப்பட்டுள்ளது.

இதனிடையே கொலை செய்த பின் தனது நெருங்கிய நண்பருக்கு தொலைபேசியில் தொடர்புகொண்ட பிஸ்டோரியஸ், மோசமான சம்பவம் நடந்து விட்டது, எனது காதலியை கொன்றுவிட்டேன்.என, கூறி கதறி அழுதாராம்.

### முன்னாள் காதலனின் எஸ்.எம்.எஸ்.

தென்னாபிரிக்க ரக்பி வீரர் பிரான்கோயிஸ் ஹக்கார்டின் காதலிதான் ஸ்டீன்கேம்ப். கடந்த நவம்பரில் தான் பிஸ்டோரியசின் காதலியானார். தொடர்ந்து ஹக்கார்டுடன் தொடர்புகொள்வதை பிஸ்டோரியஸ் விரும்பவில்லை.

சம்பவத்தன்று மாலை 6 மணிக்கு பிஸ்டோரியஸ் வீட்டுக்கு வந்த ஸ்டீன்கேம்ப், இரவு முழுவதும் அவருடன் தங்கினார். நள்ளிரவில் ரக்பீ வீரர் ஹக்கார்டிடம் இருந்து பிஸ்டோரியசின் காதலிக்கு எஸ்.எம்.எஸ் வந்தது. இதைப்பார்த்து ஆத்திரம் அடைந்த பிஸ்டோரியஸ், காதலியுடன் சண்டையிட்டுள்ளார். ஒரு கட்டத்தில், கிரிக்கெட் துடுப்பை எடுத்து மண்டையில் அடிக்க, குளியலறை பக்கம் சென்று ஒளிந்துள்ளார் ஸ்டீன்கேம்ப்.



உடனே, தனது துப்பாக்கியால் குளியலறை துளை வழியாக சுட்டுள்ளார். தலையில் குண்டு பாய்வதை தடுக்க இரு கைகளால் மறைத்துள்ளார். இதனால் தான், அவரது கைகளில் காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்டீன்கேம்ப் 6 மணிக்கு வந்தது, பிஸ்டோரியஸ் வீட்டில் இருந்த சி.சி.டி.வி கமராவில் பதிவாகியுள் ளது. தவிர, கொல்லப்பட்டபோது இரவு உடையில் இருந்தது, படுக்கையறை கலைந்திருந்தது போன்றவை, அவர் இரவு தங்கியிருந்ததை உறுதி செயதன. இதனால், இவ் வழக்கில் இருந்து பிஸ்டோரியஸ் தப்புவது மிகவும் கடினம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சமூகத்தின் முன் மகிந்த மண்டியிடார்-ஹெகலிய



சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ மண்டியிட மாட்டார் என ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

ஹரிஸ்பத்துவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சில வெளிநாட்டு சக்திகள் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். மகிந்த ராஜபக்ஷ என்பது யார் ? எங்கிருந்து வந்தார்? என்பதனை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் நடைபெறவுள்ள நிலையில் சில உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் இலங்கைக்கு எதிராக செயற்படுவதில் தீவிரம் காட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். எனினும்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களுக்கு அடி பணிந்து மண்டியிட மாட்டார் எனவும், வீரியமாக எழுந்து நின்று சவால்களை எதிர்நோக்குவார் எனவும், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். (செ-11)

# சமாதான நீதவான்களுக்கு பணம் வழங்க வேண்டாம்

## நீதி அமைச்சு அறிக்கை

ஆவணங்களை உறுதிப்படுத்துவதற்காக சமாதான நீதவான்களுக்கு பணம் வழங்க வேண்டாம் என பொது மக்களிடம் நீதி அமைச்சு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இது தொடர்பாக நீதி அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சத்தியக்கடதாசி மற்றும் ஆவணங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வரும் பொதுமக்களிடம் சமாதான நீதவான்கள் சிலர் பணம் அறவிடுவதற்காக நீதி அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளன.

காகிதாகிகள் போன்ற தேவைகளுக்காகவும் பணம் அறவிடுவதாக தெரியவந்துள்ளது. ஆவணங்கள் எவற்றையும் உறுதிப்படுத்துவதற்காக சமாதான நீதவான்கள் எவ்விதமான பணத்தொகையும் அறவிடக்கூடாது என அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தில் நீதி அமைச்சு திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளது.

சமாதான நீதிவான் பதவி இலவசமாக வழங்கப்படும் சேவை சம்பந்தமானது என்பதோடு ஆவணங்களை உறுதிப்படுத்துவது போன்ற சேவைகளைப் பெற்றுக்கொள்வற்காக வரும் பொதுமக்களிடம் இருந்து பணம் கேட்டுப் பெறுவதற்கு இந்த பதவி வகிப்போருக்கு எத்தகைய அதிகாரமும் கிடையாது.

இலவசமாக மேற்கொள்ள வேண்டிய இந்த சேவைக்காக பணம் அறவிடும் சமாதான நீதிவான்கள் தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, நீதி அமைச்சு, பொலிஸ் ஆகியவற்றிற்கு அறிவிற்பதற்கான உரிமை பொதுமக்களுக்கு உண்டு.

சமாதான நீதிவான்கள் பணம் அறிவிட்டதாக நிரூபிக்கப்பட்டால் அவர்களின் பதவிகளை பறிக்கும் அதிகாரம் நீதி அமைச்சருக்கு உள்ளது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# தமிழ்மணி கனகரத்தினம் காலமானார்

பன்மொழிப்புலவர் சங்கச்சான்றோன், கலாபூஷணம், தமிழ்மணி த.கனகரத்தினம் தனது எண்பத்தாறாவது வயதில் நேற்று முன்தினம் இறைபதம் அடைந்துள்ளார்.

தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், சிங்களம், ஹிந்தி, மலையாளம், ஆகிய மொழிகளில் பண்டித்தியம் பெற்ற இவர் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியராகவும் இலங்கைக் கல்விச் சேவையில் தமிழ் பாடநூல் வெளியிட்டுப் பகுதித் தலைவராகவும் கொழும்புப் பல்கலைக் கழக ஊடகவியல் துறை வருகை விரிவுரையாளராகவும் பண்டாரநாயக்க சர்வதேச கற்கை மத்திய நிலையம், கொத்தலாவலை பாதுகாப்புக் கல்விக் கழகம் பல்கலைக் கழகம் முதலான பல உயர்கல்வி நிலையங்களின் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

கொழும்புத் தமிழ் சங்கத்தின் சங்கப் புலவராய் விளங்கிய இவர், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பத்துக்கு மேற்பட்ட நூல்களையும், நூற்றுக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

மேலும் உலக தமிழாராய்ச்சி மாநாடுகளுக்கும் இவர் ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்து பங்கு பற்றிப்புகழ் பெற்றுள்ளார். (செ-2)

# பாகிஸ்தான் கடற்படை குழு நேற்று கொழும்பு வருகை

ஆறு நாட்கள் உத்தியயோகபூர்வ விஜயமென்றைகொண்டு பாகிஸ்தான் கடற்படையின் தூதுக்குழுவொன்று நேற்று செவ்வாய்க் கிழமை கொழும்பை வந்தடைந்துள்ளது.

நான்கு பேர்கொண்ட இந்த தூதுக் குழுவிற்கு கட்டளை தளபதி மெஹ்பூப் இலாஹி தலைமை தாங்குகின்றார்.

இருநாடுகளும் பயங்கரவாத எதிர்ப்பு போரில் தமக்குள்ள அனுபவங்களை பகிர்ந்து கொள்வதே இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

இரு நாடுகளுக்கும் இடையில் கடந்த செப்டெம்பர் மாதம் நடைபெற்ற படை அதிகாரிகள் மட்ட பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாகவே இந்த விஜயம் அமைகின்றது.

இந்த தூதுக்குழுவினர் இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ஜனத கொலம்பேஜ் உள்ளிட்ட உயர் அதிகாரிகளை சந்திக்கவுள்ளனர்.

இதேவேளை, இந்த தூதுக்குழுவினர் கிழக்கு மற்றும் தென் கடற்படை தலைமையங்களுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த தூதுக்குழுவின் சந்திப்புக்கள் மற்றும் முக்கிய செயற்பாடுகளின் போது கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலய பாதுகாப்பு ஆலோசகர் கேணல் ஷியகர் பட்டும் பங்கு பற்றுவார். (செ-11)

# ரூ.48 ஆயிரம் பணம் திருடர்களால் அபகரிப்பு

(மல்லாவி)

பட்டப்பகலில் வீட்டின் பின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் கனகபுர மகா வித்தியாலயத்தில் அருகில் உள்ள சின்னரம்பன் பாரதி வித்தியாலய ஆசிரியர் எஸ்.பஞ்சலிங்கம் என்பவரது வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, குறித்த ஆசிரியரும் அவரது மனைவியும் கடமைக்குச் சென்றபின் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தினை பயன்படுத்தி உள் நுழைந்ததிருடர்கள், வீட்டில் உள்ள 48 ஆயிரம் ரூபாய் பணத்தினை அபகரித்துச் சென்றுள்ளனர்.

தெய்வாதீனமாக வீட்டில் உள்ள நகைகள் திருடர்கள் கையில் அகப்படவில்லை.

மதியம் 2 மணிக்கு வீடு திரும்பியபோதே திருடர்கள் கைவரிசையைக் காட்டியது தெரிய வர உடனடியாக கனகராயன்குளம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

கைரேகை அடையாளங்களை பதிவு செய்த பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (செ-15)


யூனியன் அசூரன்ஸினால் யாழ் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்டு சர்வதேச ரீதியாக சிறந்த தலைமைத்துவப் பயிற்சியினை [MDRT (MILLION DOLAR ROUNDTABLE)] EXFERIENCE SEMINAR பெற்றுக்கொள்வதற்காக 20.02.2013 அன்று இந்தியாவின் ஹைதரபாத் நகரிற்கு செல்லும் எமது அணியினர்.


MR.N.MATHIVATHANAN (ZONAL MANAGER, NORTHERN)


MR.N.SUGUNAN (REGIONAL MANAGER, JAFFNA)


MR.T.KUBENDRAN (ACT.REGIONAL MANAGER, POINTPEDRO)


MR.A.ANTONJANOSHAN (BRANCH MANAGER, CHUNNAKAM)


MR.V.RAYMOND (UNIT DEVELOPMENT MANAGER, JAFFNA)


MR.N.PRAGASH (UNIT DEVELOPMENT MANAGER, CHUNNAKAM)


MR.K.VIMALATHEESAN (UNIT DEVELOPMENT MANAGER, CHUNNAKAM)


MR.M.JEYAMATHAN (UNIT DEVELOPMENT MANAGER, CHUNNAKAM)


MR.B.GNANACHELVAM (UNIT DEVELOPMENT MANAGER, POINT PEDRO)


MR.T.MAVENTHAN (AGENCY DEVELOPMENT OFFICER, CHUNNAKAM)


MR.P.GNANAVEL (AGENCY DEVELOPMENT OFFICER, JAFFNA)


MR.V.THUVARAGAN (ADVISOR POINT PEDRO)

union assurance
Trust in your tomorrow, today.

வாழ்த்துவோர்
யூனியன் அசூரன்ஸ் யாழ் மாவட்ட உத்தியோகத்தர்கள்

(சி-2478)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி சென்ற இலங்கையர்கள் கடலில் தத்தளித்த நிலையில் மீட்பு

(ஜகர்த்தா)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டவர்கள் பயணித்த இலங்கைப் படகு விபத்துக்குள்ளானதில் பாதிப்புக்குள்ளான 26 இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்களை இந்தோனேசிய கடலோர காவல்துறையினர் நேற்று மீட்டுள்ளனர்.

இந்தோனேசியாவுக்குட்பட்ட தித்தீவில்கடந்த 12 நாட்களாக இவர்கள் தத்தளித்துக் கொண்டிருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக இந்தோனேசிய குடிவரவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் 17 ஆண்களும், 6 பெண்களும், 3 சிறார்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இலங்கையர்களை படகில் அழைத்துச் சென்ற ஆட்கடத்தற்காரர்கள் படகு விபத்துக்குள்ளான நிலையில், பயணிகளை நிர்க்கதியாக விட்டுவிட்டு தப்பிச் சென்றுவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை மியன்மார் பிரஜைகள் அவுஸ்திரேலியா செல்லும் நோக்கில் படகில் பயணித்து உணவு, குடிநீர் இன்றி நாட்கணக்கில் அந்தரித்த நிலையில் 98 பேர் உயிரிழந்தனர். மிகுதிப் பேர் இலங்கை கடற்பரப்பில் வைத்து காப்பாற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

# பாலச்சந்திரன் படுகொலை...

பிரபாகரனின் 12 வயது மகனான பாலச்சந்திரன் கொல்லப்படுவதற்கு முன்னரும், பின்னரும் எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் இரு படங்களை அவர் வெளியிட்டிருக்கிறார்.

தமது நிபுணர்களின் ஆய்வுகளின் படி இந்த இரு படங்களும் ஒரே கமெராவில் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளதாகவும் அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இன்னுமொரு படத்தில் அந்தச் சிறுவன் சுற்றி அவனது மெய்ப்பாதுகாவலர்கள் என்று நம்பப்படும் 5 பேர் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் சுடப்பட்டு கிடப்பதும் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் படங்களின் மூலம், அந்தச் சிறுவன் மோதலின் இடையில் அகப்பட்டு இறக்கவில்லை என்பதும், அவன் பிடிக்கப்பட்டு, அதன் பின்னரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான் என்பதும் தெரிய வருகின்றது.

இந்தப் புகைப்படங்கள், தன்னுடைய கொலைக்களம் என்ற ஆவணப்படத் தொடரில் வரவிருக்கும் "பாதுகாப்பு வலயம்" என்னும் ஆவணப்படத்தில் இடம்பெறவிருப்பதாகவும் கலும் மக்ரே கூறியுள்ளார்.

இந்தப் புதிய படங்கள் போர்க் குற்றங்கள் குறித்து மேலும் கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கத்தை பதிலளிக்கும் நிலைக்கு உள்ளாக்கும்.

இந்த ஆவணப்பட ஆதாரங்கள் இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வரவிருக்கும் தீர்மானத்தை ஆதரிப்பதற்கு இந்தியாவுக்கு அழுத்தம் கொடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# விசாரணைகளில் இருந்து...

கின்றார். அதே கமாராவில் தான், பாலச்சந்திரன் சுடப்பட்டு வீழ்ந்து கிடக்கும் காட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

# இராணுவப்...

திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

எனினும் போலியாக வெளியிடப்படும் இவ்வாறான புகைப்படங்கள் இணையத்தின் வாயிலாக இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் நோக்கில் வெளியிடப்படுகின்றன என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வருடம் சனல் 4 ஊடகம் வெளியிட்ட இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்ற ஆதாரங்கள் தொடர்பான காணொளித் தடயங்களும் பிரபாகரனின் மகன் படுகொலை செய்யப்பட்ட படங்களையும் ஆராய்ந்த புகழ்பெற்ற தடயவியல் நிபுணர் பேராசிரியர் டெரிக் பவுண்டர், அவை போலியானவை அல்ல என்பதை நிரூபித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

ஆனால் பிரபாகரன் மகன் குறித்து வெளியான படம் போலியானது என்று இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார். மேலும் இலங்கையில் அமைதியை குலைக்க சிலர் முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தநிலையில் இலங்கையின் கொலைக்களங்கள் பற்றி வெளியிட்ட சனல் 4 ஆவணப்பட இயக்குனர் கலும் மக்ரே, பாலச்சந்திரன் கொலை செய்யப்பட்ட படம் உண்மையல்ல என்ற இலங்கை அரசின் குற்றச்சாட்டை முற்றிலும் நிராகரித்துள்ளார்.

மேலும் போர்க் குற்றங்களுக்கு பதில் சொல்வதில் இருந்து இலங்கை அரசு தப்பிக்க முடியாது எனவும் போர்க் குற்றம் பற்றி பன்னாட்டு விசாரணை நடத்த இந்தியா முயற்சி எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் மகன் கொலை மட்டும் அல்ல, பாலியல் வன்கொடுமை, சரணடைந்தவர்களை சுட்டுக்கொன்றதற்கு ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாகவும் கலும் மக்ரே தெரிவித்துள்ளார். (செ-11)

# பாலகன் படுகொலை...

குழுக்களாலோ மிகவும் திட்டமிட்டு நடத்தப்பட்ட படுகொலையாகும். அதுவும் ஒரு சிறுவன் மீது.

கிடைக்கப்பட்ட இவ் டிஜிட்டல் படங்கள் ஒரேநாள் ஒரே புகைப்படக் கருவி மூலம் எடுக்கப்பட்டிருப்பதை புகைப்படங்களை ஆதாரங்களை ஆராய்ந்தறியும் நிபுணர்கள் உறுதி செய்துள்ளனர். இதில் சில படங்கள் பாலச்சந்திரன் உயிருடன் இருப்பதையும் சில படங்கள் அவர் கொல்லப்பட்டிருப்பதையும் பதிவு செய்துள்ளது.

கடந்த வருடம் கிடைக்கப்பெற்ற காணொளித் தடயங்களும் இந்தப் படங்களையும் ஆராய்ந்த புகழ்பெற்ற தடயவியல் நிபுணர் பேராசிரியர் டெரிக் பவுண்டர் உடலத்தின் குண்டுபட்ட இடத்தின் நிறத்தையும் அது சிதைந்துள்ள விதத்தையும் வைத்து பாலச்சந்திரன் மிகவும் அருகில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்பதனை நிரூபித்துள்ளார்.

துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த திசையும் குண்டு துளைத்த உடலின் துவாரங்களையும் வைத்து முதலாவது குண்டு சுடப்பட்டவுடன் பாலச்சந்திரன் பாலச்சந்திரன் கீழே விழுந்துள்ளார் என்றும் அதன் பின்னர் அவர் மேலும் நான்கு தடவை சுடப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் இந்தப்படங்கள் எந்த விதமான மாற்றங்களுக்கோ ஏமாற்றுக்களுக்கோ உட்படாதவை என்றும் படங்கள் நூறு சதவீதம் உண்மையானவை என்றும் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் எடுக்கப்பட்டுள்ள காணொளியும் ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. (செ-11)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA** (1768)

French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புக்கள் மிகவிரைவில்.. T.P.021 222 8093

61, Kachcheri-Nallur Road, Jaffna

(ரக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

விசிட்டிங்காட் - பில்புத்தகம் - லேபல்கள் - நினைவுமலர்கள் பருவகால மலர்கள் - சஞ்சிகைகள் - போஸ்டர்கள் - லேட்டபாட் சான்றிதழ்கள் - அழைப்பிதழ்கள் - CD கவர்கள் - CD ஸ்ரிக்கர்கள்

சகலவிதமான பிறிண்டிங் வேலைகளையும் குறைந்த செலவில் நவீன உயர்தொழில் நுட்பத்தில் செய்திட

**கலர் பிறிண்ட்**

**யாழில் Mகொழும்பு பிறிண்டேர்ஸ்**

666, கே.கே.எஸ் வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மிக அருகாமை)

தொ.பே: 0771974875 கல்விச்சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்

**மணல் மண் வேண்டுமா?**

கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?

இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?

உங்கள் இடத்திற்கே கொண்டு வருகிறோம்.

**4 1/2 டிராக்டர் 20,500/=**

**தொடர்பு: ராம்**

**072 63 78 546**

(2462)


# மரண அறிவித்தல்

## பொன்னையா நடராசா (சோதிடர்)



தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நடராசா (சோதிடர்) 18.02.2013 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான பொன்னையா பார்வதி தம்பதியினரின் மகனும், காலம்சென்றவர்களான அம்பிகைபாகர்-பொன்னம்மா தம்பதியினரின் மருமகனும், காலம்சென்ற பாக்கியலட்சுமியின் கணவரும், இராசேந்திரம், மகேந்திரன், கணேஸ்வரி (லண்டன்), யோகேந்திரன்(சுவிஸ்), அன்பரசி (சோதிடர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

மனோன்மணி, ஜெகதீசன்(லண்டன்), வித்தியானந்தநங்கை(சுவிஸ்), இராகவன் (நல்லூர் பிரதேசசபை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,

கிரிகரன்(சுவிஸ்), கிருபாளினி, கிரிராஜ்(லண்டன்), கிரிசாளினி( சுவிஸ்), ஜெயவாணி(லண்டன்), சந்திரவாகினி(லண்டன்), ஜெயரதன்(லண்டன்), இந்துஜா (சுவிஸ்),மாதவன், ஹர்ணி, கௌதமன் ஆகியோரின் அன்புப் பேரனும்,

கீர்த்திகா, கிரிசனா, நர்த்தனன், தர்சி, பிரிஸ்ஹா, அங்கவி, துர்க்கா, துளசி, ஜெகஸ்திகா, ஏனோக், நிகிஷா, வைஷன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21/02/2012) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக காலை 10.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்தானை வீதி,
தாவடிதெற்கு.
கொக்குவில்.

(1778)

தகவல்:
குடும்பத்தினர்
0212052708

# 6ஆம் மாத நினைவு நாள்

21.02.2013



மலர்வு 06 - 06 - 1969

உதிர்வு 21 - 08 - 2012

**அமரர் செல்லையா பானுதேவன் (பானு)**

(முல்லை வடக்கு வலைஞர்மடம் பனை தென்னை வள அபிவிருத்திச்சங்க முன்னை நாள் தலைவரும் கிளை முகாமையாளரும்)

எங்கள் குடும்ப பாசகுல விளக்கே
எம்மை பாதி வழியில்
திடீரென்று பரிதவிக்க விட்டு சென்றதேனோ?
நீ மறைந்து ஆறு மாதங்கள் ஆனால்
என்ன அறுபது வருடங்கள் சென்றாலும்
உன் நினைவுகள் எம்மை விட்டு அகலாது

செல்வபுரம்

உன் பிரிவினால் துயருறும்
குடும்பத்தினர்

(A-2479)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org